எம்.பி.,க்களின் எண்ணிக்கை, நியமன எம்.பி.,க்களையும் சேர்த்து 786. இதில், துணை ஜனாதிபதி வேட்பாளர் வெற்றி பெற மொத்தம் 394 வாக்குகள் தேவை. அந்த வகையில் பார்த்தால், லோக்சபாவில் பா.ஜ., தலைமையிலான தே.ஜ., கூட்டணிக்கு 293 எம்.பி.,க்களும், ராஜ்யசபாவில் 129 எம்.பி.,க்களும் உள்ளனர். எனவே, தே.ஜ., கூட்டணி நிறுத்தும் வேட்பாளர், 422 எம்.பி.,க்களின் வாக்குகள் பெற்று எளிதில் வெற்றி பெற்று விடுவார்.

இந்த நிலையில், நாட்டின் இரண்டாவது பெரிய பதவியான துணை ஜனாதிபதி பதவிக்கு, பல மூத்த அரசியல் தலைவர்களின் பெயர்கள் அடிபடுகின்றன. குறிப்பாக, பீகார் முதல்வர் நிதிஷ் குமாரை துணை ஜனாதிபதியாக அமர வைக்க பா.ஜ., முயன்று வருவதாக கூறப்படுகிறது. அதே சமயம், ஜம்மு - காஷ்மீரின் துணை நிலை கவர்னர் மனோஜ் சின்ஹாவின் பதவிக் காலம் வரும் ஆக., 6ம் தேதியுடன் முடிகிறது. இதனால், துணை ஜனாதிபதி பதவிக்கு அவரது பெயரும் அடிபடுகிறது.

அவரைத் தொடர்ந்து, டில்லி துணைநிலை கவர்னர் வி.கே.சக்ஸேனா, ராஜ்யசபா துணைத் தலைவர் ஹரிவன்ஷ் நாராயண் சிங், ராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங், சுகாதாரத்துறை அமைச்சர் ஜே.பி.நட்டா ஆகியோரது பெயர்களும் துணை ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான பெயர் பட்டியலில் இடம் பிடித்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், அடுத்த துணை ஜனாதிபதி வேட்பாளர் தேர்வை பொறுத்த வரையிலும், விரைவில் நடக்க உள்ள தமிழகம், பீகார் மாநில சட்டசபை தேர்தல்களை குறிவைத்து பா.ஜ., வியூகம் வகுத்து வருகிறது.

தொடர்ச்சி 3ம் பக்கம்




# வர்த்தக செய்திகள்

## சிட்டி யூனியன் வங்கி லாபம் ரூ.306 கோடி




நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில், சிட்டி யூனியன் வங்கியின் நிகர லாபம் 16 சதவீதம் உயர்ந்து, 306 கோடி ரூபாயாக அதிகரித்து உள்ளது. கடந்த ஆண்டின் இதே காலத்தில் இது 264 கோடி ரூபாயாக இருந்தது. கும்பகோணத்தை தலைமையிடமாக கொண்ட சிட்டி யூனியன் வங்கி, 876 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதன் முதல் காலாண்டு முடிவுகளை அவ்வங்கியின் நிர்வாக இயக்குனர் காமகோடி நேற்று (31ம் தேதி) வெளியிட்டார். அப்போது அவர் கூறுகையில், ‘நடப்பு நிதியாண்டின் முதல் மூன்று மாதங்களில் வங்கியின் மொத்த வியாபாரம் 18 சதவீதம் உயர்ந்து ரூ.1,19,754 கோடியாக அதிகரித்துள்ளது. அதேபோல், வங்கியின் வைப்பு தொகை 20 சதவீதம் உயர்ந்து ரூ.65,734 கோடியாகவும் மற்றும் கடன்கள் கடந்த ஆண்டைவிட 16 சதவீதம் உயர்ந்து ரூ.54,020 கோடியாகவும் உள்ளது. மேலும், முதலாம் காலாண்டில் வங்கியின் மொத்த லாபம் 21 சதவீதம் அதிகரித்து ரூ.451 கோடியாக உள்ளது. அதே சமயம் வங்கியின் நிகர லாபம் 16 சதவீதம் அதிகரித்து ரூ.306 கோடியாக உயர்ந்துள்ளது. இதுதவிர, வங்கியின் நிகர வட்டி வருமானம் ரூ.625 கோடியாக உயர்ந்துள்ளது. வங்கியின் வாராக்கடன் பொறுத்தவரை 2.99 சதவீதமாக குறைந்துள்ளது. மேலும் வங்கியின் நிகர வாராக்கடன் 1.20 சதவீதமாக குறைந்துள்ளது. வங்கியின் சொத்தின் மீதான வருவாய் 1.55 சதவீதமாக உள்ளது. தற்போது 876 கிளைகள் மற்றும் 1,776 தானியங்கி பட்டுவாடா இயந்திரங்களையும் கொண்டு செயல்பட்டு வருகிறது. அதன்படி, வங்கியின் நிகர மதிப்பு கடந்தாண்டில் இருந்த மதிப்பான ரூ.9,417 கோடியில் இருந்து ரூ.9,686 கோடியாக உயர்ந்துள்ளது, என்றார்.

## இந்தியாவில் ‘ஸ்டார்லிங்க்’ இணைய சேவை வேகம் மற்றும் கட்டண விவரம் வெளியீடு




இந்தியாவில் வெகு விரைவில் எலான் மஸ்கின் ஸ்டார்லிங்க் இணைய சேவை மக்களின் பயன்பாட்டுக்கு அறிமுகமாக உள்ளது. இந்த நிலையில், அதன் இன்டர்நெட் ஸ்பீடு, கட்டணம் உள்ளிட்ட விவரம் குறித்த தகவல் தற்போது வெளியாகி உள்ளது. கடந்த ஜூன் மாதம் ஸ்டார்லிங்க் நிறுவனம் இந்தியாவில் சேவை வழங்குவது சார்ந்து மத்திய தொலைத்தொடர்பு அமைச்சகத்திடமிருந்து முக்கிய உரிமத்தை பெற்றதாக தகவல் வெளியானது. இதன் மூலம் இந்தியாவில் செயற்கைக்கோள் அடிப்படையில் இணைய சேவை வழங்குவதற்கு ஸ்டார்லிங்க் நிறுவனத்துக்கு இருந்த பெரிய தடை நீங்கியது. உரிமம் பெற்றதையடுத்து இந்தியாவில் அந்த நிறுவனம் வணிக நடவடிக்கைகளை தொடங்கி உள்ளது. இந்த நிலையில், இந்தியாவில் விநாடிக்கு 25 எம்.பி.பி.எஸ்., முதல் 220 எம்.பி.பி.எஸ்., வேகத்தில் ஸ்டார்லிங்க் இணைய சேவை வழங்கும் என்ற தகவல் வெளியாகி உள்ளது. இந்த அதிவேக இணைய சேவையின் கட்டணம் மாதத்துக்கு ரூ.3,000 முதல் ரூ.4,200 வரையில் இருக்கும் என கூறப்படுகிறது. இதோடு ஹார்டுவேர் கிட்களுக்கு ரூ.33,000 வரை பயனர்கள் கட்டணம் செலுத்த வேண்டி இருக்கும் என தெரிகிறது. முதற்கட்டமாக நாடு முழுவதும் சுமார் 20 லட்சம் பேருக்கு மட்டுமே ஸ்டார்லிங்க் சேவை வழங்கப்படும். இது நடைமுறைக்கு வந்தால் டவர் (செல்போன் சிக்னல் கோபுரங்கள்) சார்ந்த நெட்வொர்க் சிக்கல்களை பயனர்கள் எதிர்கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது என்பது குறிப்பிடத்தக்கது.

## தங்கம் விலை குறைந்தது



சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உள்ளிட்டவை தங்கத்தின் விலையை நிர்ணயிப்பதில் முக்கிய காரணிகளாக உள்ளன. கடந்த ஜனவரி மாத தொடக்கத்தில் ஒரு சவரன் தங்கம் ரூ.58 ஆயிரமாக இருந்தது. பின்னர் தங்கம் விலை படிப்படியாக உயர்ந்தது. தொடர்ந்து, தங்கம் விலை ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்டது. கடந்த மாதம் 23ம் தேதி ஆபரணத் தங்கம் ரூ.75 ஆயிரத்தை தாண்டி வரலாற்றில் புதிய உச்சத்தை பதிவு செய்தது. இந்த நிலையில், ஆகஸ்ட் மாதம் தொடங்கிய நிலையில் இன்று (ஆக., 1) முதல் நாளே தங்கம் விலை குறைந்துள்ளதால் நகை பிரியர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அமெரிக்கா இந்தியா இறக்குமதி பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதித்த நிலையில் தங்கம் விலை குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில், நேற்று (ஜூலை 31) 22 காரட் தங்கம் கிராமுக்கு ரூ.40 குறைந்து ஒரு கிராம் தங்கம் ரூ.9,170க்கும் சவரனுக்கு ரூ.320 குறைந்து, ஒரு சவரன் தங்கம் ரூ.73,360க்கும் விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில், இன்று (ஆக., 1) 22 காரட் தங்கம் கிராமுக்கு ரூ.20 குறைந்து ஒரு கிராம் தங்கம் ரூ.9,150க்கும் சவரனுக்கு ரூ.160 குறைந்து, ஒரு சவரன் தங்கம் ரூ.73,200க்கும் விற்பனை செய்யப்படுகிறது. அதே போல, 18 காரட் தங்கம், கிராமுக்கு ரூ.10 குறைந்து, ஒரு கிராம் ரூ.7,555க்கும், ஒரு சவரன் ரூ.60,440க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையும் அதிரடியாக கிராமுக்கு ரூ.2 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.123க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.1,23,000க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



# புதிய வரி!

அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு பரஸ்பர வரி விதிக்கும் நிர்வாக உத்தரவில் அதிபர் டொனால்ட் டிரம்ப் கையெழுத்திட்டார். இந்த உத்தரவு ஆக., 7ம் தேதி முதல் அமலுக்கு வரும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.



# ★ இந்தியா உட்பட 69 நாடுகளுக்கு... ★ அமெரிக்க அதிபர் டிரம்ப் அதிரடி ★ பிரதமர் மோடி ஆலோசனை

**புதுடில்லி, ஆக. 1-**

அமெரிக்க அதிபராக, 2வது முறையாக கடந்த ஜனவரி 20ம் தேதி டொனால்டு டிரம்ப் பொறுப்பேற்றார். அமெரிக்காவுக்கு இந்தியா உட்பட உலக நாடுகள் தங்கள் நாட்டு பொருட்களுக்கு அதிக வர்த்தக வரி விதிப்பதாக தெரிவித்தார். இதற்கு பதிலடியாக பரஸ்பர வரி விதிக்கப்படும் என அறிவித்த அவர், கடந்த ஏப்., 2ம் தேதி அதற்கான பட்டியலையும் வெளியிட்டார். இதில் இந்திய பொருட்களுக்கு 26 சதவீத வரி விதிக்கப்படும் என கூறப்பட்டிருந்தது.

எனினும், இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தன. இதையடுத்து, இடைக்கால ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள ஏதுவாக பரஸ்பர வரி விதிப்பை 90 நாட்களுக்கு நிறுத்தி வைத்தார் டிரம்ப். இதையடுத்து, அமெரிக்காவுடன் பல நாடுகள் பேச்சுவார்த்தை நடத்தி வந்தன. 90 நாள் காலக்கெடு வரும் இன்று (ஆக., 1) தேதி நிறைவடைந்த நிலையில், பிரிட்டன், வியட்நாம் உள்ளிட்ட ஒரு சில நாடுகள் மட்டுமே அமெரிக்கா வரி விதிப்பு தொடர்பாக ஒப்பந்தம் செய்துள்ளன.




இந்த நிலையில், அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு பரஸ்பர வரி விதிக்கும் நிர்வாக உத்தரவில் அதிபர் டொனால்ட் டிரம்ப் கையெழுத்திட்டுள்ளார். இந்த உத்தரவு ஆக., 7ம் தேதி முதல் அமலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 69 நாடுகள் மற்றும் ஐரோப்பிய யூனியன் பிரதேசம் புதிய வரி விதிப்பு பட்டியலில் இருக்கும் நிலையில், பிற நாடுகள் அனைத்துக்கும் 10 சதவீதம் வரி விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தியாவுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பேச்சுவார்த்தையில் இதுவரை உடன்பாடு எட்டப்படாததால், இந்தியாவுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று டிரம்ப் அறிவித்துள்ளார். தற்போது இந்தியா உட்பட 69 நாடுகள் மற்றும் ஐரோப்பிய யூனியன் பிரதேசத்துக்கு விதிக்கப்பட்டுள்ள புதிய வரி விதிப்பு உத்தரவில் டிரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

அதிகபட்சமாக சிரியாவுக்கு 41 சதவீதம் வரி விதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, லாவோஸ் மற்றும் மியான்மர் நாடுகளுக்கு 40 சதவீதம் இறக்குமதி வரி விதிக்கப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்துக்கு 39, ஈராக் மற்றும் செர்பியாவுக்கு 35, லிபியா, அல்ஜீரியாவுக்கு 30 சதவீதம் வரி விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவை போன்று வியாட்நாம் மற்றும் தைவான் நாடுகளுக்கும் 20 முதல் 25 சதவீதம் வரை வரி விதிக்கப்பட்டுள்ளது. அதே போல், பாகிஸ்தானுக்கு 19, இஸ்ரேல், ஐஸ்லாந்து, நார்வே, பிஜி, கானா, கயானா மற்றும் ஈக்வடார் நாடுகளுக்கு 15 சதவீதம் விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இந்தியப் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிப்பதாக, அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ள நிலையில், ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் உடன் பிரதமர் மோடி போனில் ஆலோசனை நடத்தினார். இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தி உள்ளனர். அப்போது இந்தியாவின் நீண்ட கால பிரதமராக 2வது இடத்தில் இருக்கும் மோடிக்கு, ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளுக்கு வரி விதித்து வரும் டிரம்ப் நடவடிக்கை, அதனால் ஏற்படும் சாதக பாதகங்கள், அதை சமாளிக்க என்ன செய்வது என்று இரு தலைவர்களும் ஆலோசித்தனர்.

பாகிஸ்தானில் மிகப்பெரிய கச்சா எண்ணெய் உற்பத்தி நிலையம் அமைக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறி உள்ள நிலையில் யு.ஏ.இ., அதிபருடன் பிரதமர் மோடி பேச்சு நடத்தியது முக்கியத்துவம் பெறுகிறது. யு.ஏ.ஓ., மட்டுமின்றி, சவுதி அரேபியா, கத்தார் உள்ளிட்ட அனைத்து வளைகுடா நாடுகளின் தலைவர்களுடனும் பிரதமர் மோடி, நெருக்கமான தொடர்புகளை பராமரித்து வருவது குறிப்பிடத்தக்கது.


# பல்வேறு துறை சார்ந்த திட்டங்கள்; முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

**சென்னை, ஆக. 1-**

முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை சார்பில் திடக்கழிவு மேலாண்மையில் ஒருங்கிணைந்த கட்டமைப்பை உருவாக்கும் வகையில், தூய்மை தமிழ்நாடு நிறுவனத்திற்கும், சென்னை - இந்திய தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழகத்தின் கலாசார உறவுகளை மேம்படுத்தும் வேர்களைத் தேடி திட்டத்தின் கீழ், 14 நாடுகளைச் சேர்ந்த 99 அயலகத் தமிழ் இளைஞர்களுக்கு, இன்று (1ம் தேதி) முதல்வரும் 15ம் தேதி வரையிலான தமிழக பண்பாட்டுப் பயணத்திற்கான பயண குறிப்புகள், புத்தகங்கள், அடையாள அட்டை மற்றும் உடைகள் போன்ற பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார்.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் மாநிலத்தின் சுற்றுலாத் தலங்களை உலகத்தரத்தில் மேம்படுத்தும் நோக்கில், குண்டாறு அணை, ஏலகிரி, பூண்டி நீர்த்தேக்கம், முத்துக்குடா கடற்கரை மற்றும் மதுரை ஒட்டல்



தமிழ்நாடு வளாகம் ஆகியவற்றில் 18 கோடியே 12 லட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 5 புதிய திட்டப் பணிகளையும், அருங்காட்சியக துறை சார்பில், சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில் 6 கோடியே 84 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய நிர்வாகக் கட்டடத்தையும் திறந்து வைத்தார்.

முதல்வரை, சுற்றுலா மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் ராஜேந்திரன் சந்தித்து, தமிழகத்தில் உள்ள, ஐந்து கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு டில்லியில் 3.7.2025 அன்று நடைபெற்ற விழாவில் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் சம்மேளனத்தால் வழங்கப்பட்ட விருதுகளை காண்பித்து வாழ்த்துப் பெற்று, கள்ளக்குறிச்சி-2 மற்றும் அரூர், சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இலாப பங்கீட்டு ஈவுத்தொகையாக 22 கோடியே 60 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் சென்னை, பெரும்பாக்கத்தில் 6.94 கோடி ரூபாய் செலவில் அழகுப்படுத்தப்பட்ட பூங்கா மற்றும் வில்லிவாக்கம், பாடி, வடபழனி ஆகிய இடங்களில் 11.50 கோடி ரூபாய் செலவில் மேம்பாலங்களின் கீழ் அழகுபடுத்தும் பணிகள் ஆகிய 4 முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்து, 91.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 13 முதல்வர் படைப்பகங்கள் உள்ளிட்ட 26 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் திருவண்ணாமலையில் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தகவல் தொழிற்நுட்ப வல்லுனர்களுக்கு 600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 63,200 சதுர அடி கட்டுமான பரப்பளவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு காணொளி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

# அ.தி.மு.க., பொதுச் செயலாளர் தேர்வு விவகாரம் எடப்பாடி பழனிசாமியின் மனு தள்ளுபடி

**சென்னை, ஆக. 1-**

அ.தி.மு.க., பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை நிராகரிக்கக் கோரி, எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்த மனுவை சென்னை உரிமையியல் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

கடந்த 2022, ஜூலை 11ம் தேதி நடைபெற்ற அ.தி.மு.க., பொதுக்குழு கூட்டத்தில், எடப்பாடி பழனிசாமி, பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். ஓ. பன்னீர் செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர்களை கட்சியில் இருந்து நீக்குவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

இந்த தீர்மானங் கள் செல்லாது என அறிவிக்கக்



கோரியும், அ.தி.மு.க., பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப் பட்டதை ரத்து செய்யக் கோரியும் திண்டுக்கல்லைச் சேர்ந்த சூர்யமூர்த்தி என்பவர் சென்னை உரிமை யியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இதனிடையே, அ.தி.மு.க., பொதுச்செயலாளராக தேர்வு செய்யப் பட்டதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை நிராகரிக்கக்கோரி சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் எடப்பாடி பழனிசாமி மனு தாக்கல் செய்தார். இந்த மனு இன்று (1ம் தேதி) விசாரணைக்கு வந்த போது, எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து நீதிபதி உத்தரவிட்டார். மேலும், அ.தி.மு.க., பொதுச்செயலாளரை அடிப்படை உறுப்பினர்கள் தேர்வு செய்ய வேண்டும் என்றும், பொதுச்செயலாளர் நியமனத்திற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு செல்லும் என்றும் அவர் தெரிவித்தார். அதே நேரத்தில், இந்த வழக்கு, தேர்தல் ஆணையத்தின் விசாரணைக்கு இடையூறாக இருக்காது என்றும் தெரிவித்தார்.




சர்வதேச புலிகள் தினத்தை முன்னிட்டு, வித்யாகிரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்கள் புலிகள் போல் மாஸ்க் அணிந்து வந்தனர். பள்ளி முதல்வர் ஹேமமாலினி சுவாமிநாதன் தலைமை ஏற்று சிறப்பித்தார்.

**நான்கவது நீதிமன்றம் மாண்புமிகு விபத்து கோரிருமை தீர்பாயம் சென்னை மனு எண்.5/2025**

**MCOP No.5130/2016**

இப்கோ டோகியோ ஜெனரல் இன்சுரன்ஸ் கம்பெனி லிட் மனுதாரர் / இரண்டாவது எதிர்மனுதாரர்

எதிர்

1.சதீஸ் குமார் (இளவர்) எதிர் மனுதாரர் / மனுதாரர்
2.அருண்குமார் எதிர் மனுதாரர் / முதல் எதிர் மனுதாரர்
3.சி.அழகு 3வது எதிர் மனுதாரர் / 3வது எதிர் பார்கின்ற எதிர் மனுதாரர்
4.ஓரியன்டல் இன்சூரன்ஸ் கம்பெனி 4வது எதிர் மனுதாரர் / 4வது எதிர் பார்கின்ற எதிர் மனுதாரர்.

முகவரி:
சி.அழகு
த/பெ. சின்னையா
எண்.70/260, வைக்கோ தொட்டி தெரு, திருவல்லிகேணி, சென்னை.600 005.

மேற்கண்ட வழக்கானது இடைகால 5/2025 எம் சி ஓ பி.5130/2016 3வது ஆக மற்றும் முகவரியில் சொல் லப்பட்ட சி. அழகு ஆகிய உங்களை புதியதாக மேற்கண்ட வழக்கில் மூன்றாவது எதிர்மனுதாரர்ராக சேர்க்க மனுதாக்கல் செய்யப்பட்டு, அந்த மனுவானது 6.8.2025 அன்று காலை 10.15 மணிக்கு மேற்கண்ட வழக்கிற்க்கு மேற்கண்ட நீதிமன்றத்தில் ஆஜராக வாய்தா போடப்பட்டுள்ளது.

மேற்கண்ட வாய்தா தேதி 6.8.2025 அன்று காலை 10.15 மணிக்கு நீங்கள் ஆஜராகதவறும்பட்சத்தில், தாங்களுக்கு எதிராக நீதிமன்றம் முடிவு எடுக்க கூடும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

**க.பூமாலை**
**மனுதாரர் / 2வது எதிர் மனுதாரர் வழக்கறிஞர்**

**முதலாவது சிறப்பு நீதிமன்றம் மாண்புமிகு விபத்து கோரிருமை தீர்பாயம் சென்னை**

**MCOP No.6750/2024**

ஒய்.இப்ராஹிம் மற்றும் பலர் மனுதாரர்கள்

எதிர்

1.எ.ரகுநாதன்
2.நியூ இந்தியா அஸ்யூரன்ஸ்
3.முகமது அலி
4.யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி
எதிர் மனுதாரர்கள்

முகவரி:
அ.ரகுநாதன் முதல் எதிர்மனு தாரர்
எண்.431, 8வது பிளாக் கே.பி. பார்க், டிமெல்லோஸ் சாலை, பெரம்பூர் பேரக்ஸ், சென்னை.600 012.

மேற்கண்ட வழக்கானது மேற்கண்ட முதல் எதிர் மனுதாரர் மேற்கண்ட நீதிமன்றத்தில் 6.8.2025 அன்று காலை 10.15 மணிக்கு ஆஜராவதற்காக வழக்கு வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்கண்ட வாய்தா தேயாகிய 6.8.2025 அன்று காலை 10.15 மணிக்கு நீங்கள் ஆஜராக தவறும் பட்சத்தில் தாங்களுக்கு எதிராக நீதிமன்றம் ஒரு தலைபட்சமாக தீர்மானிக்க கூடும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

**எ.சிக்கந்தர்**
**மனுதாரர் வழக்கறிஞர்**

**ஆறாவது நீதிமன்றம் மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம், சென்னை**

**M.C.O.P.No.706/2025**

Riyas Ahamed
Petitioner
Vs
1.Arokya Sagayaraju.A,
2.The New India Assurance Co. Ltd.,
3.S.Muthu
Respondents

To
Arokya Sagayaraju.A,
Plot No.5, Kankaiyamman Koil Street, Kavarapalayam,
Avadi Camp, Ambattur,
Thiruvallur District.600 054.
முதலாம் எதிர்மனுதாரர்

மேற்படி மோட்டார் வாகன விபத்து சம்மந்தமான வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மேற்படி மனு மீதான விசாரணை தங்கள் வருகைக்காக வரும் 03.09.2025 அன்று நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும். தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு வழங்கப்படும் என்பதை அறியவும்.

**M/S. K. SIVAKUMAR**
**மனுதாரரின் வழக்கறிஞர்.**

**ஆறாவது நீதிமன்றம் மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம், சென்னை**

**M.C.O.P.No.702/2025**

Sibi
Petitioner
Vs
1.Arokya Sagayaraju.A,
2.The New India Assurance Co. Ltd.,
3.S.Muthu
Respondents

To
Arokya Sagayaraju.A,
Plot No.5, Kankaiyamman Koil Street, Kavarapalayam,
Avadi Camp, Ambattur,
Thiruvallur District.600 054.
முதலாம் எதிர்மனுதாரர்

மேற்படி மோட்டார் வாகன விபத்து சம்மந்தமான வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மேற்படி மனு மீதான விசாரணை தங்கள் வருகைக்காக வரும் 03.09.2025 அன்று நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும். தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு வழங்கப்படும் என்பதை அறியவும்.

**M/S. K. SIVAKUMAR**
**மனுதாரரின் வழக்கறிஞர்.**

**ஆறாவது நீதிமன்றம் மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம். சென்னை**

**M.C.O.P.No.674 of 2025**

Dharani
Petitioner
Vs
1.Shanmugam Sathishmani
2.Royal Sundaram Gen. Ins. Co. Ltd.,
Respondents

To
Shanmugam Sathishmani,
No.10, Davidson Street,
Kotwal Bazaar, Chennai 600 001.
முதலாம் எதிர்மனுதாரர்

மேற்படி மோட்டார் வாகன விபத்து சம்மந்தமான வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மேற்படி மனு மீதான விசாரணை தங்கள் வருகைக்காக வரும் 01.09.2025 அன்று நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும். தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு வழங்கப்படும் என்பதை அறியவும்.

**M/S.K.SIVAKUMAR**
**மனுதாரரின் வழக்கறிஞர்.**

**ஆறாவது நீதிமன்றம் மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம். சென்னை**

**M.C.O.P.No.672 of 2025**

Perundevi
Petitioner
Vs
1.Shanmugam Sathishmani
2.Royal Sundaram Gen. Ins. Co. Ltd.,
Respondents

To
Shanmugam Sathishmani,
No.10, Davidson Street,
Kotwal Bazaar, Chennai 600 001.
முதலாம் எதிர்மனுதாரர்

மேற்படி மோட்டார் வாகன விபத்து சம்மந்தமான வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மேற்படி மனு மீதான விசாரணை தங்கள் வருகைக்காக வரும் 01.09.2025 அன்று நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும். தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு வழங்கப்படும் என்பதை அறியவும்.

**M/S.K.SIVAKUMAR**
**மனுதாரரின் வழக்கறிஞர்.**

# தூத்துக்குடியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு ஆணை வழங்கல்

**தூத்துக்குடி, ஆக. 1-**

முதல்வர் மு.க.ஸ்டா லின் அறிவிப்பின்படி, அரசுத் துறை களின் சேவை களை ஒரே இடத்தில் பொதுமக்கள் பெற்று பயன் பெறும் வகையில் உங்களுடன் முகாம் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, தூத்துக்குடி மாநகரம் 35, 36 மற்றும் 44வது வார்டுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் சுப்பையா முதலியார்புரம் பகுதியில் உள்ள புனித சார்லஸ் நடுநிலைப்பள்ளியில் நடைபெற்றது. முகாமில் 590 மகளிர் உரிமைத் தொகை விண்ணப்ப மனுக்கள், 236 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்ந்த மனுக்கள், 103 மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்ந்த மனுக்கள், 89 கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை மனுக்கள், 62 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்ந்த மனுக்கள், 45 எரிசக்தி துறை சார்ந்த மனுக்கள், 33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை மனுக்கள் உட்பட மொத்தம் 1252 விண்ணப்ப மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டன. முகாமை பார்வையிட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க., செயலாளருமான கீதாஜீவன், மின் இணைப்பு பெயர் மாற்றம் குறித்து மனு அளித்த பயனாளிக்கு உரிய தீர்வு ஆணைகளை உடனடியாக வழங்கினார்.



முகாமில் தூத்துக்குடி கோட்டாட்சியர் பிரபு, மாநகராட்சி உதவி ஆணையர் பாலமுருகன், தாசில்தார் முரளிதரன், சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் முருகேஸ்வரி, மாநகராட்சி சுகாதார அலுவலர் ராஜபாண்டி, அரசு வழக்கறிஞர் ஆனந்த் கேபிரியேல் ராஜ் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் மாநகர தி.மு.க., செயலாளர் ஆனந்தசேகரன், மண்டல தலைவர் அன்னலட்சுமி, மாமன்ற உறுப்பினர் விஜயலட்சுமி துரை, வட்ட செயலாளர்கள் செல்வராஜ், சிங்கராஜ், சுப்பையா, வட்ட பிரதிநிதிகள் துரை, சத்யபாலன், சரவணன், ஐகோர்ட் ராஜா, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ரமேஷ், மாநகர இளைஞரணி அமைப்பாளர் அருண் சுந்தர், மாவட்ட மருத்துவர் அணி தலைவர் அருண்குமார், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் அண்ணாதுரை, சுற்றுசூழல் அணி துணை அமைப்பாளர் மகேஷ்வரன்சிங், பகுதி துணை செயலாளர் சங்கர், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் நிர்மல் சரவணக்குமார், துணை அமைப்பாளர் கணேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பொது அறிவிப்பு

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருத்தணி குறுவட்டம் சத்திரஞ் ஜெயபுரம் ஊராட்சி, சீனிவாசபுரம் மேதினி புரம் 3/97 வசிக்கும் திரு நாராயண சாமி த/ பெ. திரு. வெங்கடேச ரெட்டி என்பவருடைய தந்தை திரு வெங்கடேச ரெட்டி த/பெ திரு ராமசாமி ரெட்டி தேதி 20.03.1982 ஆம் வருடம் மேற்படி கிராமத்தில் இறந்து உள்ளார். இவருடைய இறப்பு கவனக்குறைவால் பதிவு செய்யாத காரணத்தால் மேற்படி இறப்புபதிவு செய்ய கோரி மனு செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின், இந்த விளம்பரம் கண்ட 15 தினங்களில் திருத்தணி வருவாய் கோட்டாட்சியர்/ திருத்தணிவட்டாட்சியர்/திருத்தணிவருவாய்ஆய்வாளர் ஆகியோரிடம் எழுத்து மூலமாக ஆட்சேபனை தரலாம் அப்படி தவறும் பட்சத்தில் மனுதாரர் கோரியவாறு இறப்பு சான்று வழங்கப்படும்,என பொது அறிவிப்பு செய்யப்படுகிறது.

**மணிபாரதி**
**வருவாய் ஆய்வாளர்**
**திருத்தணி**

# தி.மு.க., ஆட்சியில் மின் கட்டணம் 67 சதவீதம் உயர்ந்துள்ளது: எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

**பரமக்குடி, ஆக. 1-**

பரமக்குடி பேருந்து நிலையம் முன், அ.தி.மு.க., பொதுச்செயலாளரும் முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி, பொதுமக்கள் முன்பு பேசுகையில், தி.மு.க., ஆட்சி மன்னர் ஆட்சியாக நடைபெற்று வருகிறது. 2026 சட்டசபை தேர்தலில் பொதுமக்களாகிய நீங்கள் எல்லாம் அ.தி.மு.க. கட்சியை ஆதரித்து இரட்டை இலைக்கு வாக்களித்து மக்களாட்சியை கொண்டு வருவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.



தி.மு.க., தேர்தல் அறிக்கையில் சொத்து வரி உயர்த்த மாட்டோம் என்று சொன்னார்கள், ஆனால் எல்லா வரிகளையும் உயர்த்திவிட்டனர். அ.தி.மு.க., ஆட்சி இருந்தபோது வறட்சி, புயல், கொரோனா காலத்தில் கூட சிறப்பாக செயல்பட்டு விலைவாசி உயராமல் பார்த்துக்கொண்டோம். இன்று புயல் இல்லை, வெள்ளம் இல்லை, வறட்சி இல்லை, கொரோனா இல்லை. ஆனாலும் விலை உயர்கிறது. தி.மு.க., கட்சி யல்ல, கார்ப்பரேட் கம்பெனி. ஸ்டாலின் சேர்மன், மற்றவர்கள் இயக்குனர்கள். ஸ்டாலினை அடுத்து உதயநிதியை கொண்டுவர முயல்கிறார்கள். அ.தி.மு.க.,வில் மட்டும் யார் வேண்டுமானாலும் அதிகாரத்துக்கு வரலாம். ஆனால், தி.மு.க.,வில் அந்த குடும்பத்தினர் மட்டும் தான் வர முடியும். இந்த குடும்ப ஆட்சிக்கு 2026 தேர்தல் முற்றுப்புள்ளி வைக்கும்.

தி.மு.க., கூட்டணி தான் சிறுபான்மை பாதுகாப்பு என்று மாயத் தோற்றம் காட்டுகிறார்கள். உண்மையிலேயே பாதுகாப்பு கொடுத்தது அ.தி.மு.க., தான். அ.தி.மு.க., ஆட்சியில் மதச்சண்டை சாதிச்சண்டை இல்லை ஆனால் இப்போது தமிழகம் கலவர பூமியாகிவிட்டது. தற்போதைய தி.மு.க., ஆட்சியில் மின் கட்டணம் 67 சதவீதம் உயர்ந்துள்ளது, என்றார்.

# புதுவையில் புதிய சிமெண்ட் சாலை, குடிநீர் பணிகளை சபாநாயகர் செல்வம் பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார்



**புதுச்சேரி, ஆக. 1-**

பூரணாங்குப்பம் கிராமத்தில்உள்ளவிக்ரமாதித்தன் வீதியில்சாலைஅமைத்துதர வேண்டும் என்ற பகுதி மக்களின் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கோரிக்கையை தொகுதி எம்.எல்.ஏ.,வும், சபாநாயகருமான செல்வம், உரிய நடவடிக்கை எடுத்து ரூபாய் 4 லட்சம் மதிப்பில் புதிய சிமெண்ட் சாலை அமைப்பதற்கு அரசாணை பெற்று தந்தார். அதன்படி விக்ரமாதித்தன் வீதியில் புதிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளை அவர் தொடங்கி வைத்தார். தொடர்ந்து இடையார் பாளையம் கிராமத்தில் உள்ள மல்லிகாம்பாள் நகரில் ரூ.1.40 லட்சம் மதிப்பில் புதிய குடிநீர் குழாய் அமைக்கும் பணியை பூமி பூஜை செய்து தொடங்கி வைத் தார். இந்த நிகழ்ச்சிகளில் அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் ரமேஷ், உதவி பொறியாளர் நாகராஜ், இளநிலை பொறியாளர் சரஸ்வதி மற்றும் அப்பகுதி முக்கிய பிரமுகர்கள் சக்திபாலன், லட்சுமி கந்தன், தட்சிணாமூர்த்தி, புருஷோத்தமன், முருகானந்தம், தண்டபாணி, புத்துப்பட்டான், மணி, பாக்கியராஜ், சண்முகம், ரமேஷ், பார்த்திபன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

உயர்நீதிமன்றம், மதராஸ்
(மேல்முறையீட்டு அதிகார வரம்பு)
CMP.எண்.23082/2025
in
OSA எண்.42349/2024
in
OA எண்.4559/2021
in
C.S எண்.185/2014

G.சம்பத்குமார்.IPS
மனுதாரர்/மேல்முறையீட்டாளர்/ மனுதாரர்/3-ம் பிரதிவாதி
-VS-
1.மகேந்திர சிங் தோனி
எதிர்மனுதாரர்/பிரதிவாதி/ எதிர்மனுதாரர்/வாதி
2.ஜீ மிடிய கார்ப்பரேஷன் லிமிடெட்
3.திரு.சுதிர் சவுத்ரி
4.நியூஸ் நேஷன் நெட்வொர்க் லிமிட்டெட்
எதிர்மனுதாரர்கள்/எதிர்முனுதாரர்/ எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

விடுநர்,
திரு.சுதிர் சவுத்ரி,
ஜீ நியூஸ் சேனல் ஆசிரியர் மற்றும் வணிக தலைவர், எஃப் சி-19, செக்டார்-16-ஏ, நொய்டா-201301, உத்திரபிரதேசம்.
மேலும் ஆல்பா மையம், ஈகிள் ஹவுஸ், 3வது மாடி, 150 & 151, வடக்கு உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை-600017, தமிழ்நாடு.

மேற்கண்ட CMP. எண்.23082/2025-ல், OSA எண்.42349/2024-, OA எண்.4559/2021-ல், C.S எண்.185/2014. வழக்கு 04.08.2025 அன்று ஆஜராக மேற்கண்ட மாண்புமிகு நீதிமன்றத்தில் உத்தரவிடப்பட்டுள்ளது, மேலே குறிப்பிடப்பட்ட நாளில், நீதிமன்றதில் காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலம் ஆஜராகுமாறு கேட்டு கொள்ள படுகிறது. தவறினால் உங்களுக்கு எதிராக முடிவு செய்ய நேரிடும்.

R.C. பால் கனகராஜ்

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS
(Appellate Jurisdiction)
CMP No.23082/2025
In
OSA No. 42349/2024
Against
O. A. No. 4559/2021
In
C.S.No.185/2014

G.Sampath kumar IPS,
Petitioner/Appellant/ Applicant /3rdDefendant
Vs
1.Mahendra Singh Dhoni,
Respondent/Respondent/ Respondent/ Plaintiff
2. Zee Media Corporation Limited,
3. Mr. Sudhir Chaudhary,
4. News Nation Network Pvt. Ltd--
Respondents/Respondent/ Respondents /Defendants

To,
Mr. Sudhir Chaudhary, Editor and Business Head of Zee News Channel, Zee Media Corporation Limited, Essel Studio, FC-19, Sector 16-A, Noida-201301, Utter Pradesh. Also at; Alpha centre, Eagle House, III Floor, 150 & 151 North Usman Road, T. Nagar, Chennai- 600 017.

Take Notice that in the above CMP No.23082/2025 in OSA No.42349/2024 Against O. A. No.4559/2014 In C.S. No. 185/2014 is posted for your appearance on 04.08.2025. Kindly make your appearance either in person or through a pleader on the hearing date mentioned above at 10.30 a.m, before the Hon'ble High Court. Failing which, the matter will be decided in your absence.
Dated this day of July, 2025.

R.C. PAUL KANAKARAJ

# வடக்கு வாசல் செல்வி அம்பாள் கோவில் கொடை விழா விமரிசை

**நெல்லை, ஆக. 1-**

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் தாலுகாவில் பாப்பான் குளம் அருகிலுள்ள மடவார் விளாகம் கிராமத்தில் ஸ்ரீவடக்கு வாசல் செல்வி அம்பாள் கோவில் கொடை விழா சிறப்பாக நடைபெற்றது. கடந்த 28ம் தேதி மாலையில் மாக்காப்பு அலங்காரத்துடன் சிறப்பு பூஜை நடைபெற்றது. 29ம் தேதி அன்று காலையில் பாப்பான் குளத்தில் இருந்து கோவிலுக்கு கரகம்எடுத்துவரும்நிகழ்ச்சி



நடைபெற்றது. மாலையில் அம்பாளுக்கு அபிஷேகம் அலங் கார தீபாராதனை நடை பெற் றது. பிறகு பொங்கல் இடுதல் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இரவு ஒரு மணிக்கு மேல் அம்பாள் அலங்கரித்து வைக்கப்பட் டுள்ள சப்பர பவனி நிகழ்ச் சியும் நடைபெற்றது. 30ம் தேதி காலையில் அமுதுபடைப்பு பூஜை சிறப்பு அலங்கார தீபாராதனைநடைபெற்றது. இதில் ஏராளமான பொது மக்கள்கலந்து கொண்டனர். அனைவருக் கும் பிரசாதம் அன்னதானம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை பொதுமக்கள், கோயிலின் விழா கமிட்டியாளர்கள், இளைஞர் அணியினர் செய்திருந்தனர்.

# அவலூர்பேட்டையில் கண்காணிப்பு கேமராக்கள் சேவை; எஸ்.பி., சரவணன் துவக்கி வைத்தார்

**செஞ்சி, ஆக. 1-**

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் வட்டம் அவலூர்பேட்டையில், காவல்துறை சார்பில் கண்காணிப்பு கேமராக்கள் சேவையை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சரவணன் சிறப்புரையாற்றி துவக்கி வைத்தார்.



செஞ்சி காவல்துறை துணை கண்காணிப்பாளர் மனோகரன், பாரத ஸ்டேட் வங்கி மண்டல மேலாளர் ஜவகர், அவலூர்பேட்டை காவல் உதவி ஆய்வாளர் சுந்தர்ராஜன் முன்னிலை வகித்தனர். சத்தியமங்கலம் காவல் ஆய்வாளர் சுரேஷ்பாபு அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில், அவலூர்பேட்டை ஊராட்சியைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள, 54 சிசிடிவி கேமராக்கள் சேவையை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.சரவணன் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.எஸ்.செல்வம், ஒன்றிய கவுன்சிலர் ஷாஹீன் ஹர்ஷத், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கலா ராஜ வேலாயுதம், பழனி, வார்டு உறுப்பினர் ஜான், ஸ்டேட் பேங்க் மேலாளர் சம்பத்குமார், சிறப்பு உதவி ஆய்வாளர் கேசவன், தனிப்பிரிவு தலைமை காவலர் முனுசாமி மற்றும் மக்கள் பிரதிநிதிகள், வர்த்தக சங்க உறுப்பினர்கள், அரிமா சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## செப்டம்பர் 9ல் தேர்தல்... முதல் பக்கத் தொடர்ச்சி

குறிப்பாக, மகாராஷ்டிரா கவர்னர் சி.பி.ராதாகிருஷ்ணன் உட்பட நான்கு பேரின் பெயர்கள் முக்கியமாக பரிசீலிக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இது தொடர்பாக, பிரதமர் மோடியும், அமித் ஷாவும் தீவிர ஆலோசனையில் உள்ளனர். இந்த இரு மாநிலங்களில் இருந்து ஒருவரைத்தான் துணை ஜனாதிபதி ஆக்கலாம் என்றும் அவர்கள் ஆலோசித்து வருவதாக கூறப்படுகிறது. பீகார் முன்னாள் முதல்வரின் மகனும் மத்திய வேளாண் துறை இணை அமைச்சருமான ராம்நாத் தாக்கூரை துணை ஜனாதி பதி ஆக்குவது குறித்து தீவிர ஆலோசனைநடத்தப்பட்டுள்ளது.

அதேபோல, பீகார் மாநில கவர்னர் ஆரீப் முகமது கான், முன்னாள் மத்திய அமைச்சரும், பா.ஜ., மூத்த தலைவருமான முக்தார் அப்பாஸ் நக்வி ஆகியோரது பெயர்களும்தீவிரபரிசீலனையில் இருப்பதாக கூறப்படுகிறது. அதேபோல, தமிழகத்தைச் சேர்ந்த பா.ஜ., மாநில தலைவராக இருந்தவரும், தற்போதைய மகாராஷ்டிரா கவர்னருமான சி.பி.ராதாகிருஷ்ணனும், பிரதமரின் பரிசீலனையில் இருப்பதாக கூறப்படுகிறது.

## பலன் பெற்றோரின் பாராட்டுரைகள்!



**பக்கவாதம்:** இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எனது வலது கையும்,காலும், செயலிழந்துவிட்டது.நான் ஏழை என்பதால் அதிக செலவு செய்யமுடியவில்லை. பிறகு ஆறுமாதமாக எந்த வேலையும் செய்ய முடியவில்லை பிறகு டிவி யின் மூலம் ரப்பானி வைத்தியசாலா விளம்பரத்தைப் பார்த்தேன் மருந்து சாப்பிட்டு இப்பொழுது நன்றாக இருக்கிறேன். ஆர்.ஜெயராமன்,புதுவாயல், பொன்னேரி வட்டம்.



**முடக்குவாதம்:** எனக்கு 6,7 வருடங்களாக உடல் முழுவதும் எல்லா மூட்டுகளிலும் வலியும், வேதனையும் இருந்தது. தோள், கழுத்து, முதுகு, இடுப்பு,கால் என்று எல்லா இடங்களிலும் வலி இருந்தது. இதன் காரணமாக வீட்டு வேலையைக்கூட என்னால் செய்ய முடியாது. பல மருத்துவர்களிடம் மருந்து சாப்பிட்டும் வலி நின்றபாடில்லை. பிறகு டிவியின் மூலம் ரப்பானி வைத்தியசாலாவில் மருந்து சாப்பிட்டேன். இப்போழுது நன்றாக இருக்கிறேன்.ஆர். இந்திரா, வடபழனி



**ஆஸ்துமா:** நான் 13 ஆண்டுகளாக ஆஸ்துமா நோயினால் மூச்சுவிட முடியாமல் அவதிப்பட்டேன். இரவு தூங்கவும் முடியாது நடக்கவும் முடியாது. ஆங்கில மருந்தும் வேலை செய்யவில்லை. பிறகு டிவியின் மூலம் விளம்பரத்தை பார்த்தேன் ரப்பானி வைத்தியசாலாவில் மருந்து சாப்பிட்டு இப்பொது நீண்ட தூரம் நடக்கிறேன். ஐஸ் மோர் குடிக்கிறேன். சாந்தி சார்லஸ்,கமலம் தெரு, புது அகரம் சென்னை -99



**சோரியாசிஸ்:** எனக்கு 14 ஆண்டுகளாக தலையில் பொடுகு இருந்தது. உடம்பில் மீன் செதில்போல் இருந்தது. எப்பொழுதும் உடம்பெல்லாம் அரிப்பு, நமச்சல் இருக்கும் எங்கேயும் செல்லமுடியமால் அதிகமாக கஷ்டபட்டேன். பிறகு டிவியின் மூலம் ரப்பானி வைத்தியசாலா விளம்பரத்தைப் பார்த்தேன் மருந்து சாப்பிட்டேன் . இப்பொழுது நன்றாக இருக்கிறேன்.டி.சிபு குமார், பண்ருட்டி.



**இடுப்பு வலி:** எனக்கு 2,3 வருடங்களாக இடுப்பு வலியால் உட்காரவோ நிற்கவோ முடியாது, பெரிய பெரிய மருத்துவமனை சென்று பார்த்தேன். எந்த பலனும் இல்லை பிறகு ஆப்ரேஷன் செய்யக் சொன்னார்கள் நான் பயந்து போய் விட்டேன் பிறகு புத்தகத்தின் மூலம் டிவியின் மூலம் விளம்பரத்தை பார்த்தேன்.ரப்பானி வைத்தியசாலாவில் மருந்து சாப்பிட்டேன் இப்பொழுது விவாசயம் வேலைகள் எல்லாம் நன்றாக செய்கிறேன். சிவமணி,கரிவேடு கிராமம், ஆற்காடு வட்டம்.

**பக்கவிளைவுகள், பத்தியம் ஏதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.**



டாக்டர் ஹக்கீம் S.A. சையத்சத்தார்
ரப்பானி வைத்யசாலா
Old No.65, New.139,டாக்டர் பெசன்ட் ரோடு,
(மீசாகிப்பேட்டை மார்க்கெட் அருகில்) சென்னை - 14
044-28476969/28470874

**விஜய் சூப்பர் டிவியில்** திங்கள் முதல் ஞாயிற்றுக்கிழமை வரை காலை 8.00 மணி முதல் 8.30 மணி.
**கலைஞர் செய்தியில்** திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.30 முதல் 10 மணி வரை

**டாக்டர் சையத் சத்தாரின் பேட்டியை காணத்தவறாதீர்கள்.**

rabbani vaidya sala www.com

## NOTICE

**Mr. K Srinivasan, S/o. Mr. K.Krishnamurthi, also known as Shreenivasan was residing at Door No. 6/6, Balakrishanan Cross Street, Mylapore, Chennai 600 004, expired on 21.06.2018. Late K.Srinivasan and Shreenivasan are the same person. Therefore, his wife is mentioned in all certificates/ documents/correspondences as VIDHYA SHREENIVASAN**

**VIDHYA SHREENIVASAN**
**Door No. 6/6, Balakrishanan Cross Street, Mylapore, Chennai 600 004.**

**ஆறாவது நீதிமன்றம் மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம். சென்னை**
**M.C.O.P.No.673 of 2025**

Valliyammal
Petitioner
Vs
1. Shanmugam Sathishmani
2.Royal Sundaram Gen. Ins. Co. Ltd.,
Respondents

To
Shanmugam Sathishmani,
No.10, Davidson Street,
Kotwal Bazaar, Chennai
600 001.
முதலாம் எதிர்மனுதாரர்

மேற்படி மோட்டார் வாகன விபத்து சம்மந்தமான வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மேற்படி மனு மீதான விசாரணை தங்கள் வருகைக்காக வரும் 01.09.2025 அன்று நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும். தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு வழங்கப்படும் என்பதை அறியவும்.

**M/S.K.SIVAKUMAR**
**மனுதாரரின் வழக்கறிஞர்.**

**மோட்டார் வாகன விபத்து நஷ்டஈடு கோரும் நீதிமன்றம் எண்.6 சென்னை**
**M.C.O.P.NO.419 OF 2025**

ராதா
மனுதாரர்
எதிர்
1.அண்ணாதுரை
2.தி நியு இந்தியா அசூரன்ஸ் நிறுவனம்
எதிர் மனுதாரர்

பெறுநர்:
அண்ணாதுரை,
எண் 11/23, லிங்கி செட்டி தெரு, சென்னை. 600001
முதலாம் எதிர்மனுதாரர்

மேற்கண்ட வழக்கு தங்களுடைய வருகைக்காக வருகின்ற 8/9/2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது எனவே அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு தாங்கள் நேரிலோ அல்லது தங்களின் வழக்கறிஞரின் மூலமாகவோ மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் வழக்கு தங்களுக்கு எதிராகவும் ஒரு தலைபட்சமாகவும் தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**திரு.என்.மலர்வண்ணன்**
**மனுதாரரின் வழக்குரைஞர்**

**COURTSPL. II BEFORE THE MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL AT CHENNAI**
**M.C.O.P.No.103 OF 2025**

M.KAMALA
PETITIONER/S
Vs
1.J.JENISH JAYAPRAKASAM,
2.RELIANCE GENRAL INSURANCE COMPANY LIMITED.
RESPONDENT/S

To R.1
J.JENISH JAYAPRAKASAM,
No.68, NSK Nagar, Mettu Street, Kaniyambadi, Vellore 632 102.

Please take notice that the above M.C.O.P.NO. 103 of 2025 is posted for your appearance on 17.09.2025 at about 10.30 A.M. You are hereby asked to appear before the above said court either in person or by pleader without fail. Failing which the matter will be decided in your absence.

**Mr.K.SRINIVASAN**
**COUNSEL FOR PETITIONER**

**மேன்மைமிகு உட்கோட்ட நிர்வாக நடுவர் / சார் ஆட்சியர், திண்டிவனம்**
**சி/ப எண்.அ4/82/2025**

ராமச்சந்திரன், த/பெ முனுசாமி
4/418 அம்மன் கோயில் தெரு தேவதானம் பேட்டை கிராமம் செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.
மனுதாரர்

மனுதாரர் ராமச்சந்திரன் என்கிற நான் மேற்படி முகவரியில் நிலையாக வசித்து வரு கின்றேன். எனது தகப்பனார் முனுசாமி 28-02-1957தேதியில் தேவதான பேட்டை கிராமத்தில் இறந்துவிட்டார் என்பதை கவனக்குறைவாக பதிவு செய்ய தவறிவிட்டேன். தற்போது முனுசாமி என்பவர் பெயரில் உள்ள சொத்தினை பட்டா மாற்றம் செய்யவும், இறப்புச் சான்று, பெறவும் தேவைப் படுவதால், இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பில் 15 தினங்களுக்குள் இந்நீதிமன்றத் ணதில் எழுத்து மூல மாகவோ, நேரிலோ ஆஜராகி ஆட்சேபணை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறினால் இந்த மனுவில் எவ்வித ஆட் சேபணையும் இல்லையென பாவித்து ஒருதலை பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும்.

**மனுதாரர்**
**ராமச்சந்திரன் த/பெ முனுசாமி**
**4/418 அம்மன் கோவில் தெரு**
**தேவதானம் பேட்டை கிராமம்**
**செஞ்சி வட்டம்**
**விழுப்புரம் மாவட்டம்.**

தினமும் மாலையில் ஆங்கிலத்தில் செய்திகளை படிக்க
EVENING TAMIL NADU
www.eveningtamilnadu.com
E-mail: eveningtamilnadu@gmail.com
FB: eveningtamilnadu

மாலை தமிழகம்
செய்தி பிரிவு தொடர்புக்கு
செல்: 7358244058,
9176415801, 9444059392
newsmataeditor@gmail.com

மாலை தமிழகம்
Admin Office:
No.G 8, Phase 1,Anubhav SSR
Pankajam enclave, No.24,
Arunachalam Road, Saligramam,
Chennai - 600 093
Ph: 9840094267- 9444052303
Email: maalaitamizhagam@gmail.com



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், கொள்ளிடம் சீர்காழி ஊராட்சி செயலாளர்களுக்கான ஊராட்சி வருவாயை தன்னிச்சையாக பெருக்குவது குறித்த பயிற்சி நடைபெற்றது. இதில், மாவட்ட வளபயிற்றுனர் சுந்தர், வட்டார பயிற்சியாளர் ரமேஷ், ஒருங்கிணைப்பாளர் சிற்றரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை திருவொற்றியூர் 5வது வார்டில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் முகாமில், திருவொற்றியூர் எம்.எல்.ஏ., கே.பி.சங்கர், மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு, பகுதிசெயலாளர்வை.ம.அருள்தாசன், சொக்கலிங்கம் ஆகியோர் பொதுமக்களுக்கு விண்ணப்ப படிவம் வழங்கினர்.

# பாடியநல்லூர் நாகாத்தம்மன் கோவில் ஆடி திருவிழா



மாதவரம், ஆக. 1-


மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி, திருப்பூர்குமரன் தெருவில் உள்ள, நாகாத்தம்மன் கோவில் ஆடி மாத திரு விழா, கோவில் ஸ்தாபகர் பூங்காவனம் மேஸ்திரி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் ராசாத்தி அம்மாள் திருக்கரங்களால் அம்ம னுக்கு பால், தயிர், இள நீர், மஞ்சள், குங்குமம், சந்தனம், பன்னீர், ஜவ் வாது, தேன் உள்ளிட்ட பல் வேறு வாசனை திரவியங் களால் அபிஷேகம் செய்து வண்ண மலர்களால் சிறப்பு அலங்காரம் செய் யப்பட்டு மஹா தீபாரா தனைகாண்பிக்கப்பட்டது.

பின்னர் அம்மனுக்கு கூழ்வார்த்தல், கும்பம் படையல் பூஜை நடை பெற்றது.

தொடர்ந்து ஆடிப்பூரம் தினத்தை முன்னிட்டு, நாகாத்தம் மனுக்கு சிறப்பு அபி ஷேகம் செய்து வண்ண மலர்கள் மற்றும் கண்ணாடி வளையல்களால் அலங் காரம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

மேலும் இந்த கோவிலில் குழந்தை பாக்கியம் கிடைக்க வேண்டி விரதம் இருந்து நெய்தீபம் ஏற்றி வைத்து அர்ச்சனைகள் செய்து தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். கோவில் சார்பில் பக்தர் களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## பிரேமலதாவிடம் இல்ல விழா அழைப்பிதழ் மாவட்ட செயலாளர் பழனி சங்கர் வழங்கல்



தென்காசி, ஆக. 1-

தே.மு.தி.க., பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்தை செ ன்னையில் உள்ள அவரது இல்லத்தில் தென்காசி தெற்கு மாவட்ட தே.மு.தி.க., மாவட்ட செயலாளர் ஆலங்குளம் பழனிசங்கர், ஆக., 29ம் தேதி நடைபெற உள்ள தனது மகன் கார்த்திக் மணிகண்டன் திருமண விழா அழைப்பிதழை குடும்பத்தினருடன் நேரில் சந்தித்து வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட பொருளாளர் சந்துரு சுப்பிரமணியம், மாவட்ட துணைச் செய லாளர் முக்கூடல் மாதவன் பிரின்ஸ், பொதுக்குழு உறுப்பினர் தங்கசாமி, பாப்பாக்குடி ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், கடையம் வடக்கு ஒன்றிய செயலாளர் சரவணன், சுப்பையா, கீழப்பாவூர் ஒன்றிய செயலாளர் உதயகுமார், மாவட்ட துணைச் செயலாளர் அப்பாஸ், ஆலங்குளம் பொருளாளர் தாசன், ராஜேந்திரன், மிக்கேல் ஹசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# காவலர் குடியிருப்பு; முதல்வர் திறந்து வைத்தார்

கும்பகோணம், ஆக. 1-

கும்பகோணம் அடுத்த திருவிடைமருதூரில் ரூ.6 கோடி மதிப்பில் கட்டப் பட்டுள்ள காவலர் குடி யிருப்பை காணொளி காட்சி மூலம் முதல்வர் திறந்து வைத்தார்.



குடி யிருப்பு வளாகத் தில் அமைச்சர் கோவி. செழியன் குத்து விளக் கேற்றி சிறப்பித்தார்.

கும்பகோணம் அடுத்த திருவிடைமருதூரில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகம் சார்பில் ரூ.6 கோடியே 5 லட்சம் மதிப் பில், 18,000 சதுர அடி பரப் பளவில், 24 காவலர் குடி யிருப்பு வீடுகள் கட்டப் பட்டன. இதனை நேற்று (31ம் தேதி) சென்னை தலைமை செயலகத்தில் இருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

தொடர்ந்து திருவிடை மருதூர் புதிய காவலர் குடியிருப்பு வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தஞ்சாவூர் வடக்கு மாவட்ட தி.மு.க., பொறுப்பாளர் சாக்கோட்டை அன்பழகன் எம். எல். ஏ., மற்றும் மாவட்ட எஸ்.பி.ராஜாராம் ஆகியோர் முன்னிலை யில், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன், குத்துவிளக்கு ஏற்றி சிறப்பித்தார்.

இந்த நிகழ்ச்சியில் கும்பகோணம் மாநகராட்சி மேயர் சர வணன், துணை மேயர் சு.ப.தமிழழகன், ஒன்றிய செயலாளர்கள் சுந்தரஜெயபால், உள்ளூர் கணேசன், சுதாகர், மாவட்ட நெசவாளர் அணி அமைப் பாளர் அனந்தராமன், சுற்றுச் சூழல் அணி துணை அமைப்பாளர் செல்வ குமார், கும்பகோணம் சார் ஆட்சியர் ஹிருத்யா மற் றும் போலீஸ் உயர் அதிகாரிகள் கலந்து கொண் டனர்.

# குன்னூர் நகராட்சி மாதாந்திர கூட்டம்



குன்னூர், ஆக. 1-

நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சி மாதாந்திர கூட்டம், நகர மன்ற தலைவர் சுசீலா தலைமையில் நடந்தது. துணைத்தலைவர் வசிம் ராஜா, நகராட்சி ஆணையா ளர் இளம்பரிதி முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் குன்னூர் மவுண்ட் ரோடு பகுதியில் உள்ள டாஸ்மாக் கடையால் பள்ளிக்குச் செல்லும் மாணவ, மாணவியர் மற்றும் அரசு மருத்துவமனைக்குச் செல் லும் நோயாளிகள், மதுப் பிரியர்களால் மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும் அருகில் பள்ளி வாசல், கோவில்களுக்குச் செல்பவர்கள் முகம் சுளிக் கும் வகையில் போதை ஆசாமிகள் அங்கேயே சிறுநீர் கழிப்பதும் தகாத வார்த்தைகள் பேசுவதாக வும், சண்டையிடுவதாக வும் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். எனவே, மவுண்ட் ரோடு பகுதியில் உள்ள டாஸ்மாக் கடையை அகற்ற சிறப்புக் கவன ஈர்ப்பு தீர்மானமாக நகர மன்றத் துணைத் தலைவர் வாசிம் ராஜா கொண்டு வந்தார்.

இதற்கு தி.மு.க., அ.தி.மு.க., அனைத்து வார்டு உறுப்பினர்களும் முழு ஆதரவு தெரிவித் தனர்.

# புதிய ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி துவக்கம்

நெய்வேலி, ஆக. 1-

நெய்வேலி எம்.எல்.ஏ. சபா.ராஜேந்திரன் ஆணைக்கிணங்க, ஒன்றிய பொதுநிதியிலிருந்து ரூபாய் 13.66 லட்சம் செலவில், விசூர் ஊராட்சி நன்னிக் குப்பம் கிராமத்தில், ஆழ் துளை கிணறு அமைக்கும் பணியை முன்னாள் பண்ருட்டி ஒன்றிய பெருந் தலைவர் சபா.பாலமுருகன் தொடங்கிவைத்தார்.



இந்த நிகழ்வில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சாந்தி பாலகிருஷ் ணன், கிளைச் செயலாளர் கணபதி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அண்ணா மலை, சேட்டு, சிவராஜ், அப்பாவு, தனபால் ஜெயக்குமார், பூபதி, மதியழகன், தேசிங்கு, குருமூர்த்தி, சேகர், கந்தச ாமி, ரங்கநாதன், கலியன், ஆறுமுகம், ஊராட்சி செயலாளர் ஜெகதீஸ்வரி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# கோவை கலைஞர் கருணாநிதி தொழில்நுட்ப நிறுவனம் ஒப்பந்தம்

கோவை, ஆக. 1-

கலைஞர் கருணாநிதி தொழில்நுட்ப நிறுவனம் (கே.ஐ.டி.,), உலகளாவிய கல்வி மற்றும் தொழில் தொடர்புகளை மேம் படுத்தும் நோக்கத்தில், அமெரிக்காவை தலைமை யிடமாகக் கொண்ட முன்னணி தொழில்நுட்ப தீர்வு நிறுவனமான கிளவுட் டெஸ்டி னேஷன்ஸ் நிறுவனத் துடன் ஒரு முக்கிய புரிந் துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.



இந்த ஒப்பந்தம் கே.ஐ.டி., துணைத் தலை வர் இந்து முருகேசன் மற்றும் கிளவுட் டெஸ்டினே ஷன்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சிவ தர்மராஜ் ஆகியோருக் கிடையில், நிறுவனத்தின் முதல்வர் டாக்டர் எம். ரமேஷ் , வணிக முயற்சி கள் இயக்குனர் வாசிம் பெரோஸ் மற்றும் ஸ்கூல் ஆஃப் கம்ப்யூட்டிங் அண்ட் எமர்ஜிங் டெக்னா லஜிஸ் டீன் விமல் ஆகி யோர் முன்னிலையில் நடை பெற்றது.

# தற்காலிக பார்க்கிங் அமைக்க ஏலம்

அந்தியூர், ஆக. 1-

அந்தியூர் புதுப்பாளை யத்தில் உள்ள குருநாத சுவாமி கோவில் ஆடித் தேர்த் திருவிழா, வரும் 13 முதல் 16ம் தேதி வரை நடக்கிறது. பர்கூர் ரோடு, கூசிக்கல்லூர் ரோடு, கரை பெருமாள் கோவில், குருநாதபுரம், வனம் செல் லும் வழி, மைக்கேல் பாளையம் மணக்காடு உள்ளிட்ட இடங்களில், தற்காலிக சைக்கிள், பைக், கார் ஸ்டாண்ட் அமைப்ப தற்கான ஏலம், அந்தியூர் ஒன்றிய அலுவலகத்தில் நடந்தது. பி.டி.ஓ., அமுதா தலைமையில் நடந்த ஏலத்தில், 15 பேர் கலந்து கொண்டு, ஐந்தாயிரம் ரூபாய் டெபாசிட் செய் தனர். அரசு ஏலத்தொகை யாக, இரண்டு லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் நிர்ணயிக் கப்பட்டது. இதில், மந்தையை சேர்ந்த சிவ லிங்கம் என்பவர், மூன்று லட்சத்துக்கு 14 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் எடுத்தார். ஜி.எஸ்.டி.,யுடன் சேர்த்து, மூன்று லட்சத்து 70 ஆயிரம் ரூபாயை செலுத்தி ரசீது பெற்றார். மற்றவர்களுக்கு டெபாசிட் தொகை திரும்ப வழங்கப் பட்டது.



திண்டுக்கல் மாவட்டம், கன்னிவாடி பேரூராட்சி, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், தேவரப்பன்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்களில் பொதுமக்களிடமிருந்து ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரிய சாமி கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். இந்த நிகழ்ச்சியில், திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் இரா.சக்திவேல், உதவி இயக்குனர் (பேரூராட்சி கள்) ஆர்.ராஜா, ஒன்றிய செயலாளர் சிவகுருசாமி, கன்னிவாடி செயல் அலுவலர் கல்பனாதேவி, பேரூராட்சி தலைவர் தனலட்சுமி சண்முகம், துணைத்தலைவர் கீதா முருகானந்தம், கன்னிவாடி பேரூர் செயலாளர் இளங்கோவன், கன்னிவாடி மாணவரணி அமைப்பாளர் சுருளிநாதன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை மதுரவாயல் சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட, வளசரவாக்கம் மண்டலம் 151வது வார்டில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமை எம்.எல்.ஏ., காரம்பாக்கம் க.கணபதி, 11வது மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர் சங்கர் கணேஷ் ஆகியோர் துவக்கி வைத்தனர். இந்த நிகழ்வில், மாமன்ற உறுப்பினர்கள் ராஜி, ஹேமலதா கணபதி, சாந்தி ராமலிங்கம், வட்ட செயலாளர்கள் மோசஸ், சுந்தர், செல்வம் மற்றும் மதியழகன், அருணாசலம், மதியழகன், பால்பாண்டியன், விஜயன், சேகர், ராஜேந்திரன், ராமலிங்கம் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# வரதராஜபுரத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்

குன்றத்தூர், ஆக. 1-

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஒன்றியம் வரதராஜபுரம் ஊராட்சியில் நடந்த, உங்களுடன் ஸ்டாலின் முகாமை, சிறு, குறு தொழில்துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தொடங்கி வைத்தார். முகாமில் பொதுமக்கள், மகளிர் உரிமைத் தொகை, ஜாதிச் சான்று, வாரிசு சான்று, பட்டா, மின் பகிர்மான குறைபாடு உள்ளிட்ட பல மனுக்கள் கொடுத்தனர். இதில், உடனடியாக தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு



அமைச்சர் தா.மோ.அன்பர சன் சான்றிதழ்கள் வழங் கினார். இதில், மாவட்ட வருவாய் அலுவலர் த.வெங்கடேஷ், மாவட்ட சேர்மன் ஆ.மனோகரன், ஒன்றிய சேர்மன் சரஸ்வதி மனோகரன், ஒன்றிய துணைத்தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், வரதராஜபுரம் ஊராட்சி மன்ற தலைவர் செல்வ மணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மனுக்கள் இல்லை அதிகாரிகளுக்கு உணவு மற்றும் தண்ணீர் இல்லை

திருத்தணி, ஆக. 1-

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி ஒன்றியத்துக்கு உட்பட்ட அகூர் கிராமத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெறுவதாக அறிவிப்பு செய்யப்பட்டு, பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் அந்த கிராமத்தில் உள்ள ஊராட்சி மன்ற நடு நிலைப்பள்ளி முகாமிற் கான ஏற்பாடுகளை செய் தனர். இதற்காக காலை முதலே அதிகாரிகள் அங்கே வந்து பணியாற்றி னர். அவர்களுக்கு தேவை யான உணவு, தண்ணீர் உள்ளிட்ட எந்த வசதியும் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் சார்பில் செய்யப்படாததால் தவித்தனர்.

இது மட்டுமின்றி 9 மணிக்கு பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகளை எழுதிக் கொண்டு மனு அளிக்க முகாம் நடை பெறும் இடத்திற்கு வந்த னர். அங்கு அச்சிடப்பட்ட உங்களுடன் ஸ்டாலின் மனு ஒரு சிலருக்கு மட்டும் கொடுத்துவிட்டு பலருக்கு கொடுக்காததால் அங்கு கூச்சல் குழப்பம் ஏற்பட் டது. தொடர்ந்து ஒன்றிய ஆணையாளரிடம் கேட்ட போது மனுக்கள் தீர்ந்து விட்டது, வெள்ளை பேப் பரில் எழுதி கொடுக்கும் படி கூறிவிட்டு சென்று விட்டார். இது குறித்து சமூக ஆர்வலர்கள் கூறும் போது, முகாம் நடத்தத்து அரசு போதிய நிதி உதவி அளித்தும் அதை செலவு செய்யாமல் அதிகாரிகள் அலட்சியப் போக்குடன் செயல்பட்டு வருகின்றனர் என்றனர்.

# ஜம்போ பேக் லிமிடெட்

பதிவு அலுவலகம்: எஸ்.கே.என்கிளேவ், புதிய எண்.4, (பழைய எண்.47) நௌரோஜி சாலை, சேத்துப்பட்டு, சென்னை-600 031

CIN : L36991TN1990PLCO19944; website :www.jumbobaglimited.com;

Email: csjbl@blissgroup.com; Ph:044 4385 1353

**30.06.2025-ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் அறிக்கை**

(ரூ. லட்சத்தில்)

| வ. எண். | விவரங்கள் | முடிந்த 3 மாதங்கள் 30.06.2025 | முடிந்த 3 மாதங்கள் 31.03.2025 | முடிந்த 3 மாதங்கள் 30.06.2024 | முடிவடைந்த 12 மாதங்கள் 31.03.2025 |
|---|---|---|---|---|---|
| | | (தணிக்கை செய்யப்படாதது) | (தணிக்கை செய்தது) | (தணிக்கை செய்யப்படாதது) | (தணிக்கை செய்தது) |
| 1 | மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம் | 3,100.82 | 3,172.32 | 2,808.47 | 12,672.49 |
| 2 | இக்காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரிக்கு முன் சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்) | 341.32 | 211.82 | 75.28 | 496.34 |
| 3 | இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 341.32 | 211.82 | 75.28 | 496.34 |
| 4 | இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்) | 225.94 | 114.33 | 47.46 | 323.71 |
| 5 | இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) | 225.94 | 104.19 | 47.46 | 313.58 |
| 6 | சமபங்கு மூலதனம் (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) | 837.37 | 837.37 | 837.37 | 837.37 |
| 7 | கையிருப்புகள் (முந்தைய ஆண்டு கணக்கில் மறுமதிப்பீடு கையிருப்புகள் நீங்கலாக) | | | | 1,744.22 |
| 8 | பங்கு ஈட்டுதொகை (அசாதாரண இனங்களுக்கு முன்) (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) | | - - - | | |
| | அ. அடிப்படை | 2.70 | 1.37 | 0.57 | 3.87 |
| | ஆ. குறைமதிப்பு | 2.70 | 1.37 | 0.57 | 3.87 |

குறிப்பு: மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகள் வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு / ஆண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டு / ஆண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் பங்கு வர்த்தக நிறுவனத்தின் URL - http://www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் http://www.jumbobaglimited.com காணலாம்.

ஜம்போ பேக் லிமிடெட்டுக்காக

இடம்: சென்னை
நாள்: 31.07.2025

G.S.அனில்குமார்
நிர்வாக இயக்குநர்
DIN: 00080712

G.A.தர்ஷன்
முதன்மை நிதி அதிகாரி



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் தெற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட நொச்சலூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி பாபு என்பவரின் மகள் அபிதா 7.5% உள் ஒதுக்கீடு மூலம் திருச்சி மருத்துவக் கல்லூரியில் தேர்வானதை முன்னிட்டு விழுப்புரம் மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் சி.வி.சண்முகம் எம்.பி.யை, திண்டிவனத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் மேல்மலையனூர் தெற்கு ஒன்றிய செயலாளர் பாலகிருஷ்ணன், அதிமுக நிர்வாகிகள் ராமச்சந்திரன், பாலாஜி, பிரதாப், ரமேஷ் மற்றும் பலர் உள்ளனர்.

# சாதுக்களுக்கு தனியாக நல வாரியம் அமைத்து தர வேண்டும்: சாதுக்கள் ஆன்மிக மாநாட்டில் தீர்மானம்

**திருவண்ணாமலை, ஆக. 1-**

திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் உள்ள இடுக்கு பிள்ளையார் கோவில் அருகே, ஒரு தனியார் மினிமகாலில் தமிழ்நாடு - அகண்ட இந்து ராஷ்டிரா சார்பில் சாதுக்கள் ஆன்மிக மாநாடு திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீகருணாநிதி சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பா.ஜ., திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தலைவர் கே.ரமேஷ், மாநாட்டை தொடங்கி வைத்து சாதுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கி சிறப்புரை யாற்றினார். இந்த மாநாட்டில், தமிழக அரசு, மகாராஷ்டிரா மாநிலத்தை முன்மாதிரியாக



கொண்டு விநாயகர் சதுர்த்தியை அரசு விழாவாக அறிவிக்க வேண்டும்; கிரிவலப் பாதையில் வாகனங் களை தடை செய்ய வேண்டும்; கிரிவலப் பாதையில் பக்தர்களுக்கு கழிப்பிடம் மற்றும் குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் தங்குதடையின்றி 24 மணிநேரமும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அண்டை மாநிலத்தை போல, தமிழக கோவில்களிலும் கட்டணமின்றி அனைவருக்கும் சமமான இலவச தரிசனத்தை ஏற்பாடு செய்ய வேண்டும். இந்து அமைப்பாளர்களை அச்சுறுத்தும் நபர்கள் மீது, கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, இந்து அமைப்புகளுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும். கிரிவலப் பாதையில் சாலையோரங்களில் தங்கும் சாதுக்களுக்கு தங்குமிடம் கட்டித் தரவேண்டும். ஏற்கனவே சாதுக்களுக்கு தங்குமிடம் கட்டி இருந்தால் அதை உடனடியாக திறக்க வேண்டும். சாதுக்களுக்கு தனியாக நலவாரியம் அமைக்க வேண்டும். தற்போது அதிகரிக்கும் கட்டாய மதமாற்றத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட எட்டு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. இந்த மாநாட்டில் பா.ஜ., மாநில செயற்குழு உறுப்பினர் ராஜ தமயந்தி, உள்ளாட்சி மேம்பாட்டு பிரிவு மாவட்ட தலைவர் டாக்டர் ராஜா அரிகோவிந்தன், அகண்ட இந்து ராஷ்டிரா அமைப்பாளர் பி.ஆசைதம்பி மற்றும் 500க்கும் மேற்பட்ட சாதுக்கள் கலந்து கொண்டனர். சமூக சேவகர் டி.பார்த்திபன் நன்றி கூறினார்.

# அரூரில் வேளாண் கல்லூரி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்: ஈ.ஆர்.ஈஸ்வரன்

**அரூர், ஆக. 1-**

தர்மபுரி மாவட்ட கொங்கு வேளாள கவுண்டர்கள் சங்கம் சார்பில், அரூரில் முப்பெரும் விழா நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன், செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில்,

''மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில், தமிழக காவல் துறை மிகச்சிறப்பாக செயல்படுகிறது. தமிழகத்தில் நடைபெறும் காவல் நிலைய மரணங்கள் வருத்தம் அளிக்கிறது. இருந்தாலும் உடனடியாக குற்றவாளிகளை கைது செய்து அவர்களுக்கு தக்க தண்டனை பெற்றுத்தருவதில் தமிழக காவல்துறை சிறந்து விளங்குகிறது.



அரூரில் வேளாண் கல்லூரி அமைப்பது குறித்து மாவட்ட பொறுப்பு அமைச்சரிடம் கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும். தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் உபரி நீர் திட்டம் பல ஆண்டுகளாக செயல்படுத்தப்படாமல் உள்ளது. ஒகேனக்கல் உபரி நீர் திட்டம் அனைத்து நீர்ப்பாசன திட்டங்கள் மற்றும் குடிநீர் திட்டங்களை நிறைவேற்றக்கோரி சில மாதங்களுக்கு முன் சட்ட சபையில் பேசினேன். முதல்வரிடம் எடுத்து கூறினேன். விரைவில் திட்டங்களை நிறைவேற்ற முயற்சி மேற்கொள்வோம்,'' என்றார்.

இதில், சங்கர் ஐ.ஏ.எஸ்., அகடமி நிறுவனர் வைஸ்ணவி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். மாநில பொருளாளர் கே.கே.சி.பாலு, முன்னாள் அமைச்சர் பழனியப்பன், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் மாநில கொள்கை பரப்பு செயலாளர் ஜி.அசோகன், மாநில செயற்குழு உறுப்பினர் செந்தில், மாவட்ட செயலாளர் கே.பி.இளங்கோ, மாவட்ட அவைத்தலைவர் பி.எம். இளங்கோ, தருமபுரி மத்திய மாவட்ட செயலாளர் அருணாச்சலம், தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் ஆனந்தன், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் வஜிரவேல், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் மனோகரன், பொருளாளர் சுபாஷ், தலைவர் சக்தி, மாவட்ட துணை செயலாளர் சீனன், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் எஸ்.வடிவேலன், மாவட்ட விவசாய அணி செயலாளர் அருள், மாவட்ட மாணவர் அணி செயலாளர் கவி, மாவட்ட தொ.அணி செயலாளர் முகிலன், மாவட்ட மாணவர் அணி செயலாளர் வேலு, மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் பிரபுதாஸ், கே.ஆர்.பி.செந்தில்குமார், துரை, திருமலை, சேகர், எஸ்.மாதையன், ஆர்.மாதையன், பெருமாள், கொங்குநாடு கலைக் குழு வள்ளி கும்மியின் ஆசிரியர் கவிபாரதி, புலவர் தமிழரசு, செயலாளர் சியாமளாதேவி மணிவண்ணன், தலைவர் விஜியா கைலாசம்,

அரூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜி.பி.வெங்கடேசன், அரூர் தெற்கு ஒன்றிய செயலாளர் முருகன், அரூர் தெற்கு ஒன்றிய தலைவர் ரவி, அரூர் நகர தலைவர் அசோகன், அரூர் மேற்கு ஒன்றிய பொருளாளர் சிவலிங்கம், அரூர் மேற்கு ஒன்றிய இளைஞர் அணி செயலாளர் விக்னேஷ், அரூர் கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி செயலாளர் கலையரசன், அரூர் கிழக்கு ஒன்றிய தகவல் தொழில் நுட்ப பிரிவு செயலாளர் விஜயகுமார், மத்திய மாவட்ட துணை செயலாளர் சந்தோஷ், பொருளாளர் செல்வம், ஒன்றிய செயலாளர்கள் விமலன், சக்தி, தவமணி, மணி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் தருமபுரி கிழக்கு மாவட்ட செய்தி(ம) விளம்பர செயலாளர் ஜி.கே.(எ)பி.ஆர்.கோகுல கிருஷ்ணன், டி.எம்.இ.பி.ஏ, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# பழவேற்காட்டில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்



**திருவள்ளூர், ஆக. 1-**

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காட்டில், உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இதில், கோட்டை குப்பம் ஊராட்சி பொதுமக்கள் தங்கள் பிரச்னைகள் குறித்து மனு அளித்து உடனடி தீர்வு காணும் விதத்தில் முகாமில் பங்கேற்றனர். தி.மு.க., திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் முகாமை துவக்கி வைக்க மீஞ்சூர் வட்டார வளர்ச்சி அலுவலர் குணசேகரன் தி.மு.க., நிர்வாகிகள் பகலவன், உமா மகேஸ்வரி, முரளிதரன், மாதர்பாக்கம் குணசேகரன், வல்லூர் பா.து.தமிழரசன், முகமது அலவி, அசோகன், ரவி, கன்னி முத்து, இயேசுராஜன், காசி, மீரான் பாஷா, தோணிரேவு முனிவேல், வருவாய் ஆய்வாளர் பிரேம், ஊராட்சி செயலர்கள் குமார், தாஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




திருத்தணியில் உங்களுடன் ஸ்டாலின் முகாமை திருத்தணி சந்திரன் எம்.எல்.ஏ.குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். உடன் நகர திமுக செயலாளர் வினோத் குமார், துணை செயலாளர் ஜி.எஸ்.கணேசன், நகர மன்ற கவுன்சிலர் அசோக் குமார் மற்றும் பலர் உள்ளனர்.

# கள்ளக்குறிச்சியில் வி.சி.க., மதச்சார்பின்மை காப்போம் பேரணி விளக்க பொதுக்கூட்டம்

**கள்ளக்குறிச்சி, ஆக. 1-**

ஒருங்கிணைந்த கள்ளக்குறிச்சி மாவட்ட வி.சி.க., சார்பில், மதச்சார்பின்மை பாதுகாப்போம் பெருந்திரள் பேரணி தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம், கள்ளக்குறிச்சி மந்தை வெளியில் உள்ள பொதுக்கூட்ட மேடையில் நடைபெற்றது. தெற்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் இரா.மதியழகன் தலைமை தாங்கினார். மாவட்ட துணைச்செயலாளர் ராமமூர்த்தி, மாவட்ட செய்தி தொடர்பாளர்கள் அனிச்சமலரவன், கனக. அம்பேத், மாவட்ட



பொருளாளர் கலையழகன், தொகுதி செயலாளர்கள் அம்பிகாபதி, இல.சிலம்பின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய செயலாளர்கள் அலெக்சாண்டர், பொன்.மாணிக்கநிலவன் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக காட்டுமன்னார் கோவில் எம்.எல்.ஏ.,வும், வி.சி.க., பொதுச்செயலாளருமான சிந்தனைச் செல்வன், துணைப் பொதுச் செயலாளர் புதுவை சு.பாவாணன், தொழிலாளர் விடுதலை முன்னணி மாநில செயலாளர் சீராளன் கள்ளக்குறிச்சி முன்னாள் மாவட்ட செயலாளர் தமிழ் மாறன் ஆகியோர் கலந்துகொண்டு தீர்மான விளக்கப் பேருரை ஆற்றினர்.

கூட்டத்தில் வடக்கு மாவட்டச் செயலாளர்கள் வேல்.பழனியம்மாள், சேந்தநாடு அறிவுக்கரசு, மண்டல செயலாளர் சவுதி ராஜ்குமார், மண்டல துணைச் செயலாளர் பொன்னிவளவன், மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு இயக்கம் மாநிலச் செயலாளர் சக்திகிரி முக்கிய நிர்வாகிகள் தொல். தமிழன், சே.க.சேரன், தமிழழகன், தமிழ் பொன்னி, கோவிந்தன், வீரவளவன், லெனின், ரமேஷ், சுந்தர்ராஜ், ரமேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். நகர செயலாளர் பாவரசு நன்றி கூறினார்.

# பெரியபுராணம் பொக்கிஷமாக திகழ மூலக்காரணமே ஆலாலசுந்தரர் தான்!

எங்களுக்கும் இப்படி வாழ்க்கையில் பல சந்தர்ப் பங்களை அந்தப் படைத்தவன் செய்துகாட்டியிருப்பான் என்பதை நினைத்துப் பார்த்தால் சுந்தர் கதை நன்றாகவே விளங்கும் என எண்ணுகிறேன்.

இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்ட சுந்தர் பின்னர் சங்கிலியார் , பரவையார் என்னும் பெண்களை மணமுடிக் கிறார். பூவுலகில் அனுபவிக்கும் இன்பங்களை அனுபவிக்கிறார். அவரின் விருப்பங் களுக்கு ஆண்டவனும் நண்பனாய் இருந்து அருள்பாலிக்கிறார் என்பதும் சுந்தரர் வரலாற்றால் அறிந்து கொள்ளுகின்றோம்.

சுந்தரர் பற்றிய கதைகள் பலவற்றைக் கேட்கும் நாம் – சுந்தரரின் முக்கியத்துவம் பற்றி நோக்குவதுதான் மிகவும் அவசியமாகும். அவற்றையே அகம் இருத்துவதுதான் முறையான தாகும் என்று கருதுகிறேன். சுந்தரரின் தடுதாட் கொண்ட கதையில் மனம் லயிக்கும் நாங்கள் சுந்தரரின் பங்களிப்பை பற்றிப் பெரிதும் பார்ப்பதே இல்லை. ‘பித்தா பிறை சூடி ‘ என்னும் பதிகத்தையும் ‘ மீளா அடிமை உனக்கே ஆளாய் ‘ என்னும் பதிகத்தையும் பாடி நிற்கும் அளவிலேயே சுந்தரரை விட்டு விடுவோம். ஆனால் அதற்கு அப்பாலும் சென்று சுந்தரரை நாம் பார்க்க வேண்டும் என்பதுதான் எனது மனக்கிடக் கையாகும்.

சம்பந்தர் , அப்பர் காலம் போல் சுந்தரர் காலம் அமைய வில்லை. சம்பந்தருக்கும் அப்பருக்கும் புறச்சமயங்களின் எதிர்ப்பலைகள் நிறையவே இருந்தன. அவர்களின் பணிகள் அனைத்துமே – புறச்சமயங் களின் எதிர்ப்பினின்று சைவத்தை ‘மேன்மை கொள் சைவமாக ‘ மிளிர்ந்திடச் செய்ய வேண்டும் என்னும் வகையிலே அமைந்தது எனலாம்.

அதற்காகவே அவர்கள் அடியவர்கள் புடைசூழ பக்தியென்னும் புரட்சியை சமூகத்தில் நடத்திக் காட்ட வேண்டியவர் களாகவே செயற் பட்டார்கள். ஆனால் சுந்தரர் காலம் அப்படி இல்லாத காரணத் தால் சுந்தரரின் பக்திப் பாடல்கள் நோக்கும், போக் கும் வித்தியாச மாய் அமைந்தது என்பது கருத் திருத்த வேண்டியது முக்கியம் எனலாம்.

சுந்தரர் இக இன்பங்களில் திளைத்தவராகவே இருந் திருக் கின்றார். ஆனால் எந்த நிலையிலும் இறைவனை மறவாதவராக , இறை புகழ் பாடுபவராக , இருந்திருக்கிறார் என்பதும் நோக்கத் தக்கது. துறவையோ, வெறுப்பையோ அவரது பக்திப் பனுவல்கள் காட்டுவதாக இல்லை எனலாம். இயற்கையினை மிகவும் நேசித் துப் பாடுகிறார். இரந்து நின்று பாடிப் பரிசில் பெறும் நிலையினை அவர் சாடுகிறார். தனக்கு வேண்டியவற்றை இறை வனிடம்



நண்பனாய் கேட்டே பெறுகின்றவராய் சுந்தரர் இருக்கின்றார்.

**தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்**
**சார்கினுந்தொண்டர் தருகிலாப்**
**பொய்ம்மை யாளரைப் பாடா**
**தேயெந்தை புகலூர் பாடுமின்**
**புலவீர்காள்இம்மை யேதருஞ் சோறுங்**
**கூறையும்ஏத்த லாம்இடர் கெடலுமாம்**
**அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்**
**கியாதும் ஐயுற வில்லையே**

என்று வித்தியாசமாய் சிந்தித்துப் பாடுவது சுந்தரரின் முக்கியத்துவம் எனலாம். அதாவது ‘தம்மையே புகழ்ந்து இச்சையான முறையில் பேசினாலும், சார்ந்து நின்றாலும், பொருள்தர மனம் வராத பொய்மைமயான வாழ்வு உடைய செல்வரைப் பாடாமல், சிவனுடைய கோவிலைப் பாடுங்கள், இந்தப் பிறப்புக்கு உரிய உணவும் உடையும் பெறலாம்; மறுமையில் சிவகதியும் கிடைக்கும். ஐயம் இல்லை’ என்பதேயாகும்.

‘வீரத்தின் மிடுக்கு இல்லாத செல்வனை – வீமன் , அருச்சுனன் என்றுபுகழ்வதில் எந்தப்பயனுமில்லை; கொடுக்க மனம் இல்லாதவனைப் பாரி என்றுபுகழ்ந்து கூறினாலும் கொடுப்பவர் இல்லை. மூத்துத் தளர்ந்து உடல் நடுங்கும் கிழவனாகிய செல்வனை – மலை போன்ற தோள் உடையவன் என்று புகழ்ந்து வாழ்த்துவதால் பயன் இல்லை. வஞ்ச நெஞ்சனை , கொடியவனை, பாவியை, கெட்டவனை , சாது என்று கூறிப் பாடுவதால் பயன் இல்லை. ஈயாத உலோபியை வள்ளல் என்றும் , கல்வி இல்லாதவனைக் கல்வி வல்லவன் என்றும் , புகழ்ந்து காலம் கழிக்காதீர். எம்பெருமான் சிவனைப் பாடிப் பயன் பெறுங்கள் ‘ என்று காட்டும் பாங்கு சுந்தரரின் வித்தியாசமான சிந்தனையினையினை வெளிக்காட்டி நிற்கிறதல்லவா !

சம்பந்தர், அப்பர், மணிவாசகர் செய்யாத ஒரு காரியத்தைச் சுந்தரர் செய்து தமிழ்ப் பக்திப் பரப்பில் முக்கியத்துவத்தைப் பெற்று நிற்கிறார். தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் எனத்தொடங்கும் ‘திருத்தொண்டத் தொகையினை’ அளித்தமை எனலாம். சுந்தரரின் இந்தக் கொடை மட்டும் கிடைக்கா விட்டிருந்தால் – நாங்கள் ஏற்றிப் போற்றிக் கொண்டாடும் சைவத்தின் அறுபத்து மூவரும் வந்திருக்கவே மாட்டார்கள். அவர்களின் இறை அனுபவங்களையும் நாம் அறியும் வாய்ப்பும் எமக்கு வாய்த்திருக்காது. அந்த பெருவாய்ப்பினை நாம் இன்று பெற்றிருப்பதற்கு அஸ்திவாரமே சுந்தரர்தான் என்பதை மனமிருத் துதல் அவசியமாகும்.

சுந்தரரின் திருத்தொண்டர் தொகை இல்லையேல் – பெரிய புராணம் வந்திருக்காது. சேக்கிழார் என்னும் தெய்வப்புலவர், செந்தமிழ் புலவர் – இறை அடியார்களை எங்கள் கண்முன்னே கொண்டுவந்து காட்டியிருக்கும் நிலையும் ஏற்பட்டிருக்காது. சிந்தாமணியில் மூழ்கிய சோழ மன்னனும் சிவனின் திருவருளை அறிந்திருக்க மாட்டான்.

பெரியபுராணம் என்னும் சைவத்தமிழ் காப்பியம் இன்று சைவத்துக்கே பெரும் பொக்கிஷமாய் திகழ்கிறது என்றால் அதற்கு மூலகாரணமே ஆலாலசுந்தரர் தான் என்பதை மறுத்துரைத்துவிட முடியாது. ஆலயங்கள் தோறும் அடியார்களின் திருவுருவச் சிலைகள் வைக்கப்பட்டு, உரிய காலங்களில் குருபூஜை செய்யப்பட்டு, திருவீதி உலா வருவதற்கும் ஆலாலசுந்தரப் பெருமானே அடித்தளம் இட்டார் என்பது பெரு முக்கியத் தைத்தை உணர்த்து கிறதல்லவா!

**தேன்படிக்கும் அமுதாம் உன்**
**திருப்பாட்டைத் தினந்தோறும்**
**நான்படிக்கும் போதுஎன்னை**
**நான்அறியேன் நாஒன்றே**
**ஊன்படிக்கும் உளம்படிக்கும்**
**உயிர்படிக்கும் உயிர்க்கு உயிரும்**
**தான்படிக்கும் அனுபங்காண்**
**தனிக்கருணைப் பெருந்தகையே**
**''வாழி திருநாவலூர் வந்தொண்டர்**
**பதம் போற்றி''**

**(முற்றும்)**



**ஜெயராமசர்மா**
**முன்னாள் தமிழ்மொழி கல்வி இயக்குனர், மெல்போர்ன், ஆஸ்திரேலியா**

# வலங்கைமான் சித்தேஸ்வரர் கோவிலில் பாலாலயம்



கும்பகோணம், ஆக. 1-

கும்பகோணம் அடுத்த திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் தாலுகா நல்லம்பூர் சித்தேஸ்வரர் சுவாமி கோவிலில் பாலாலயம் சிறப்பாக நடைபெற்றது.

கும்பகோணம் அருகில் உள்ள, திருவாரூர்மாவட்டம்வலங்கைமான் தாலுகா நல்லம்பூர் சித்தேஸ்வரர் சுவாமி கோவில், அகஸ்தியர் பூஜை செய்து சித்தி பெற்ற தலமாகும். அதனால் தான் இவ்விறைவனுக்கு சித்தேஸ்வரர் என்ற பெயர் ஏற்பட்டதாம்.

இந்த கோவில் கும்பாபிஷேகம் நடந்து 12 ஆண்டுகள் முடிந்து விட்டதால் மீண்டும் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்வதற்காக பாலாலயம் சிறப்பாக நடைபெற்றது. பாலாலயத்தை ஆடிட்டர் பாலஉமாசுதன் துவக்கி வைத்தார். தொடர்ந்து திருப்பணி வேலைகள் நடந்து வருகின்றன. வரும் கார்த்திகை மாதம், நான்கு கால யாக பூஜைக்குப்பின் மகா கும்பாபிஷேகம் செய்ய திட்டமிடப் பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கோவில் பரம்பரை அறங்காவலர் இரா.பாலசடாட்சரம் மற்றும் முன்னாள் பரம்பரை அறங்காவலர் ராஜாங்க சாக்தாச்சாரியாரின் வாரிசுகள் செய்திருந்தனர்.

# தி.மு.க., அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க கூட்டம்



திண்டிவனம், ஆக. 1-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஒலக்கூர் மேற்கு ஒன்றிய தி.மு.க., இளைஞரணி சார்பில், கீழ்மாவிலங்கை கிராமத்தில், மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்த நாள் விழா மற்றும்தி.மு.க., அரசின்நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் ஒன்றிய செயலாளர் ராஜாராம் தலைமையில் நடைபெற்றது.

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜெயபிரகாஷ் வரவேற்புரை ஆற்றினார். இதில், முன்னாள் எம்.எல்.ஏ.,க்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சிசிவா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட துணை அமைப்பாளர் பாபு, பொதுக்குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை, ஒன்றிய கவுன்சிலர்கள் அண்ணாதுரை, அன்பரசி ஜெயபிரகாஷ், விஜயபாஸ்கர், ஒன்றிய பொருளாளர் திருஞான சம்பந்தம், ஒன்றிய இளைஞரணி துணைஅமைப்பாளர்கள் லோகேஷ், தினேஷ்குமார், சக்திவேல், மணிகண்டன், சுர்ஜித் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளருமான செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., தலைமைக் கழக பேச்சாளர்கள் குடியாத்தம் பாரி, குடியரசு ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இறுதியாக ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஹேமநாதன் நன்றி கூறினார்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் பிரசார சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக திருச்செந்தூரில் பிரசாரம் செய்ய உள்ளார். அந்த இடத்தை தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.பி.சண்முகநாதன் அறிவுறுத்தல்படி தெற்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளர் கே.விஜயகுமார் கட்சி நிர்வாகிகளுடன் பார்வையிட்டார்.



திருத்தணி பலிஜாவாரி திருமண மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பயனாளிக்கு புதிய குடும்ப அட்டையை நகர் மன்ற தலைவர் திருத்தணி சரஸ்வதி பூபதி வழங்கினார். உடன் தாசில்தார் மலர்விழி, நகர திமுக செயலாளர் வினோத்குமார், நகர மன்ற துணைத் தலைவர் சாமிராஜ், கவுன்சிலர்கள் செண்பகவல்லி ஆறுமுகம், லோகநாதன், நகர அமைப்பு ஆய்வாளர் தயாநிதி மற்றும் பலர் உள்ளனர்.

# தூத்துக்குடி அய்யாசாமி காலனியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



தூத்துக்குடி, ஆக.1-

தூத்துக்குடி அய்யாசாமி காலனியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு அதற்கான ஆணைகளை பயனாளிகளுக்கு எம்.சி.சண்முகையா எம்.எல்.ஏ. வழங்கினார்.

ஒட்டப்பிடாரம் சட்டசபை தொகுதி, மாநகராட்சி பகுதிக்குட்பட்ட 2 மற்றும் 14 வார்டு மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் அய்யாசாமி காலனி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் நடைபெற்றது. முகாமில் எம்.சி.சண்முகையா எம்.எல்.ஏ., பங்கேற்று பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் குறித்து கேட்டறிந்தார். பின்னர் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பெறப்பட்ட மனுக்களில் தீர்வுகாணப்பட்ட பயனாளிகளுக்கு அதற்கான ஆணைகளை எம்.சி.சண் முகையா எம்.எல்.ஏ., வழங்கினார்.

நிகழ்ச்சியில், தாசில்தார்கள் முரளிதரன், முருகேஸ்வரி, மாநகராட்சி உதவி ஆணையர் சுரேஷ் குமார், உதவி பொறியாளர் முனீஸ், இளநிலை பொறியாளர் ராஜேஷ் கண்ணன், சுகாதார ஆய்வாளர் ராஜசேகர், மாநகராட்சி பணிக்குழு தலைவர் கீதாமுருகேசன், கிராம நிர்வாகஅலுவலர்கள்சுரேஷ்குமார், மீனாட்சி பிரேமலதா, திருவரங்க செல்வி, ராஜலட்சுமி, அன்னை இந்திராநகர் பகுதி தி.மு.க., செயலாளர் சிவகுமார், பகுதி துணை செயலாளர்கள் வேல்முருகன், குலாம் அலிசா, ஞானபிரகாஷ், மாவட்ட பிரதிநிதிகள் பூவேஸ் நாதன், தர்மராஜ், மகளிரணி அமைப்பாளர் பௌசியா அபுதாகீர், சுந்தரி, முத்து மாரி, வட்ட செயலாளர் கார்த்தி கேயன், தொ.மு.ச., முத்துராஜ், பகுத்தறிவு கழக பேரவை முருகேசன் மற்றும் கப்பி குளம் பாபு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# குமராட்சியில் புதிய சார் பதிவாளர் அலுவலகம்; முதல்வர் திறந்து வைத்தார்



காட்டுமன்னார்கோவில், ஆக. 1-

கடலூர்மாவட்டம்காட்டுமன்னார்கோவில் அடுத்த குமராட்சி பகுதியில் 20க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களில் பொதுமக்கள் பத்திரப்பதிவு செய்வதற்கு காட்டுமன்னார்கோவிலுக்கு வந்து கொண்டிருந்தனர். இதனை கருத்தில் கொண்டு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக குமராட்சியில் சார்பதிவாளர் அலுவலகம் துவங்கப்பட்டு செயல்படுகிறது. இந்த அலுவலகம் மிகவும் பழுதடைந்து சேதம் அடைந்து காணப்பட்டது. இந்த நிலையில், தமிழக அரசு புதிய அலுவலகத்தை கட்டுவதற்கு அனுமதி வழங்கி இரண்டு கோடி ரூபாயில் புதிய அலுவலகம் கட்டப்பட்டது. இந்த புதிய சார் பதிவாளர் அலுவலகத்தை காணொளி காட்சி வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். அதன் தொடர்ச்சியாக குமராட்சியில் துவக்க விழா நடந்தது. விழாவில் சிதம்பரம் எம்.எல்.ஏ., கே.ஏ. பாண்டியன், மாவட்ட பதிவாளர் இணை பொறுப்பு ஆர்.தனலட்சுமி, மாவட்ட கணக்கர் எஸ்.சுசீலா, கல்வி குழு உறுப்பினர்கள் சோழன், கோவிந்தசாமி, முன்னாள் ஊராட்சி தலைவர் கே.ஆர்.ஜி.தமிழ்வாணன், சார் பதிவாளர் சேதுராமன், அலுவலர் கார்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தர்மபுரி கிழக்கு மாவட்ட வி.சி., நிர்வாக குழு கூட்டம்



அரூர், ஆக. 1-

விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின், தர்மபுரி கிழக்கு மாவட்ட நிர்வாக குழுக் கூட்டம், மாவட்ட செயலாளர் சி.கே. சாக்கன்சர்மா தலைமையில் நடைபெற்றது. மேலிடப் பொறுப்பாளரும் முன்னாள் மாவட்ட செயலாளருமான கி.ஜானகி ராமன் கலந்து கொண்டு உரையாற்றினார். பின்னர் தமிழகத்தில் நடைபெறும் ஆணவக் கொலைகளுக்கு தமிழக அரசு தனி சட்டம் இயற்ற வேண்டும் எனதீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில், மாவட்டம், ஒன்றிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# புதுப்பட்டினம் இன்பேன்ட் ஜீசஸ் மெட்ரிக் பள்ளியில் பசுமை விழா



கல்பாக்கம், ஆக. 1-

செங்கப்பட்டு மாவட்டம் கல்பாக்கம் அடுத்த புதுப்பட்டினம் இன்பேன்ட் ஜீசஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், பசுமை விழா சிறப்பாக நடைபெற்றது. பள்ளி தாளாளர் டாக்டர் வ.பா. டென்னிசன், பள்ளி முதல்வர் ஜெயா டென்னிசன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், எல்.கே.ஜி., யு.கே.ஜி., மாணவர்கள் கலந்து கொண்டு பல்வேறு மலர்கள், காய்கனிகளை காட்சிக்கு வைத்தனர். பள்ளி வளாகத்தில் மரச்செடிகள் நட்டனர். இந்த நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் சாகிரா, அம்சா, ரோசன்கரா, எழிலரசி கலந்து கொண்டனர்.




திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம்
தூத்துக்குடி மாவட்டம்

நான்காண்டு சாதனைகள் - 2021-2025

ரூ. 70 கோடி 74 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சி பணிகள்:

1. மழை வெள்ளத்தால் முழுமையாக சேதமடைந்த வீடுகள் ரூ. 32.54 கோடி மதிப்பீட்டில் 816 வீடுகள்
2. கலைஞரின் கனவு இல்ல திட்டம் ரூ. 4.58 கோடி மதிப்பீட்டில் 148 புதிய வீடுகள்
3. ஊரக வீடுகள் சீரமைத்தல்: ரூ. 5.138 கோடி மதிப்பீட்டில் 54 வீடுகள் சீரமைத்தல்
4. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II: ரூ. 9.86 கோடி மதிப்பீட்டில் 166 உட்கட்டமைப்பு பணிகள்.
5. முதல்வரின் கிராம சாலைகள் திட்டம்: ரூ. 9.47 கோடி மதிப்பீட்டில் 32 உட்கட்டமைப்பு பணிகள்
6. பள்ளி உட்கட்டமைப்பு திட்டம்: ரூ. 37 இலட்சம் மதிப்பீட்டில் 8 உட்கட்டமைப்பு பணிகள்
7. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்: ரூ. 4.01 கோடி மதிப்பீட்டில் 37 உட்கட்டமைப்பு பணிகள்
8. குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்: ரூ. 1.11 கோடி மதிப்பீட்டில் 3 உட்கட்டமைப்பு பணிகள்
9. நமக்கு நாமே திட்டம்: ரூ. 59 இலட்சம் மதிப்பீட்டில் 3 உட்கட்டமைப்பு பணிகள்
10. கனிமம் மற்றும் சுரங்கம்: ரூ. 2.81 கோடி மதிப்பீட்டில்
11. பொது நிதி பணிகள்: ரூ. 17 இலட்சம் மதிப்பீட்டில் 6 உட்கட்டமைப்பு பணிகள்

எல்லார்க்கும் எல்லாம்

செல்வி இரா.ஐஸ்வர்யா இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி / திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தூத்துக்குடி)

திருமதி. ஆ. சாந்தி, B.Sc.,B.Ed., தனி அலுவலர்/ உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), தூத்துக்குடி.

திரு. அ.கிறிஸ்டோபர்தாசன் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம்.

திரு. ஆ.சின்னத்துரை வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம்.





தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம்
தூத்துக்குடி மாவட்டம்



நான்காண்டு சாதனைகள் 2021-2025

ரூ. 44 கோடி 39 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சி பணிகள்

1. மழை வெள்ளத்தால் பகுதியாக / முழுமையாக சேதமடைந்த வீடுகள் – ரூ. 9.38 கோடி மதிப்பீட்டில் 237 வீடுகள்
2. ஊரக வீடுகள் சீரமைத்தல் – ரூ. 1.18 கோடி மதிப்பீட்டில் 89 வீடுகள்
3. கலைஞர் கனவு இல்லம் – ரூ. 2.75 கோடி மதிப்பீட்டில் 179 வீடுகள்
4. ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – ரூ. 2.75 கோடி மதிப்பீட்டில் 31 பணிகள்
5. நவீன எரிவாயு தகனமேடை – ரூ. 1.80 கோடி மதிப்பீட்டில் 1 பணிகள்
6. முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் – ரூ. 10.23 கோடி மதிப்பீட்டில் 33 பணிகள்
7. புதிய மற்றும் கூடுதல் வகுப்பறை பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் – ரூ. 2.42 கோடி மதிப்பீட்டில் 9 பணிகள்
8. பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் – ரூ. 46.00 இலட்சம் மதிப்பீட்டில் 28 பணிகள்
9. இலங்கை தமிழர் மறுவாழ்வு – ரூ. 4.00 கோடி மதிப்பீட்டில் 72 வீடுகள்
10. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – ரூ.7.64 கோடி மதிப்பீட்டில் 98 பணிகள்
11. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் (நூலகம்) – ரூ. 17.00 இலட்சம் மதிப்பீட்டில் 14 பணிகள்
12. கனிமம் மற்றும் சுரங்கம் – ரூ. 1.61 கோடி மதிப்பீட்டில் 24 பணிகள்

ஆ.சாந்தி M.Sc.,B.Ed., உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) தூத்துக்குடி

மா.ஹைக்கோர்ட்ராஜா வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம்

ஆ.பானு வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம்


Owned Published Maalaitamizhagam by K.Sarvodayam published from M-37D,P.T.Rajan Salai K.K.Nagar, Chennai-78.and Printed at MNS Printers PVT LTD., No.76/1, Bhuvana Nursery Avenue, P.H. Road, Velappanchavadi, Chennai -77. Editor K.Sarvodayam